இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:

# தமிழன்

THAMILAN தமිළන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 81 சோபகிருது வருடம், புரட்டாதி மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை (12.10.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 26, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

Special offer
1st to 31st October 2023

KDK SINCE 1909 JAPAN

DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
Cash or Card

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
Inquiries: 011 250 0823 | 011 236 8472 | 73 | 74

## காஸாவில் பேரவலம்!



வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன

உணவு, மின்சாரமின்றி மக்கள் தவிப்பு

02பக்கம்

## கொழும்பு கல்வி வலய மாணவர்களுக்கு கண் நோய்



### பாடசாலைகள் முடங்கும் அபாயம்

கொழும்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கண் நோய் பரவிவருவதாக வலயக் கல்வி அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 02 பக்கம்

மருந்து கொள்வனவில் மோசடி

## எதிர்விளைவுகள் பாரதூரமானவை

### என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்



போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இம்யூனோகுளோபுலின் (IVIG) மருந்து நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு... 02 பக்கம்

## எம்.பியாகிறார் அலிஸாஹிர்

### வர்த்தமானி வெளியானது

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக அலிஸாஹிர் மௌலானா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அஹமட் செய்னுலாப்தீன் நஸீரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரத்தாகியமை காரணமாக... 02 பக்கம்

-சீனக்கப்பல் விவகாரம்-

# இந்தியா அதிருப்தி!

### ரணிலிடம் ஜெய்ஷங்கர் விசனம்



நமது அரசியல் செய்தியாளர்

சீனாவின் சியாங்-6 கப்பல் இலங்கை வருகை இந்தியாவின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டுள்ளதாக புதுடில்லி சுட்டிக்காட்டியபோதும் இலங்கை அதனை பொருட்படுத்தாமை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் சந்தித்தபோது தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

சீனக்கப்பல் இலங்கை வருவது, வராமல் விடுவது அல்ல.. 02 பக்கம்

இஸ்ரேல் - பலஸ்தீன மோதல்

## ஒருதலைப்பட்ச ஆதரவு ஆபத்தானது

### ஸ்ரீல.மு.கா. சுட்டிக்காட்டு

சமாதானத்துக்கு வழிவகுக்காது, இஸ்ரேல் - பலஸ்தீன மோதலில் ஒரு தரப்பை மட்டும் ஊக்குவிக்கும் மேற்குலகின் நிலைப்பாடு ஆபத்தானது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் நிலை குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,



இஸ்ரேல் - பலஸ்தீன மோதலில் வெறுப்புணர்வை தூண்டுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இஸ்ரேல் - பலஸ்தீன மோதலில் இரு தரப்பினரும் மேற்கொண்டுவரும் அனைத்து விதமான வன்செயல்களையும்... 02 பக்கம்

## சுகாதார அமைச்சை சுற்றிவளைத்து வைத்தியர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்



02பக்கம்

## 05 வயதுக்கு குறைவான சிறுவர்களின் உயிரிழப்பு வீதம் அதிகரிப்பு

நாட்டில் உயிரிழக்கும் ஐந்து வயதுக்கும் குறைவான சிறுவர்களின் எண்ணிக்கை 12.3 சதவீதம் அதிகரித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது. தேசிய கணக்காய்வு அலுவலகம் சுகாதார அமைச்சு தொடர்பில் வெளியிட்டுள்ள புதிய கணக்காய்வு அறிக்கையிலேயே மேற்படி தகவலை சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கைக்கமைய, சுகாதார அமைச்சின் நிலைபேறான திட்டத்தின் கீழ்... 02 பக்கம்

## புதிய அரசியல் கலாசாரத்துக்கான பயணத்தை இன்று ஆரம்பித்துள்ளோம்

### தேர்தலை மட்டும் இலக்குவைத்த பயணமல்ல இதுவென்கிறார் ம.ஜ.க. தலைவர் திலித்

நா.தினுஷா

நாட்டில் தற்போதுள்ள அரசியல் நிலைமை, அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகளுக்கு புதிய வழியையும் கலாசாரத்தையும் பெற்றுக்கொடுப்பதே மவ்பிம ஜனதா கட்சியின் பிரதான நோக்கமாகும். இது, புதிய அரசியல் பயணத்துக்கான அடித்தளமாக இருக்குமே தவிர எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் அல்லது ஏனைய தேர்தல்களை... 02 பக்கம்




## கோட்டாவின் தீர்மானங்களே கட்சியின் நெருக்கடிக்கு காரணம்

### சந்ரசேன எம்.பி. குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தவறான கொள்கை காரணமாகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நெருக்கடிக்குள்ளானது. அதற்கமைய, கட்சிக்குள் சிறுசிறு மனக் கஷ்டங்கள் இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நெருக்கடிக்குள்ளாக்கி அரசாங்கத்தை மாற்றியமைக்க முயற்சிக்க மாட்டோம். ஆனால், அரசியல் ரீதியாக பொதுஜன பெரமுனவுக்கு முக்கியத்துவம்... 02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



கடைசியா இந்தியாவின் நிலைமை கப்பல் பார்த்தவன் கதையாப் போச்சுது...

## பகிடிவதையைத் தடுக்க விடுதிகளில் சோதனை

பகிடிவதை சம்பவங்களை தடுக்கும் நோக்கில் பல்கலைக்கழக விடுதிகளை இரவு நேரங்களில் சோதனைக்கு உட்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் குறிப்பிடுகையில், பல்கலைக்கழக விடுதிகளில் நள்ளிரவு 12.00 மணி முதல் அதிகாலை 05.00 மணிவரையான காலப்பகுதியிலேயே அதிகளவில் பகிடிவதைச் சம்பவங்கள் பதிவாவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழக ஒழுக்கத்தை பாதுகாக்கும் அதிகாரிகள் மற்றும் மாணவர் ஆலோசகர்கள்... 02 பக்கம்

## மின்கட்டண அதிகரிப்பு அவசியம்

### பொறியியலாளர் சங்கம் வலியுறுத்து

மின்சார சபையில் நிலவும் நிதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து கொள்வதற்கு மின் கட்டணத்தை அதிகப்பது அவசியமாகவுள்ளது. அதற்கமைய, ஒக்டோபர் 01ஆம் திகதியிலிருந்து 22 சதவீதத்தால் அல்லது 07 ரூபாவால் கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. பொதுப் பயன்பாடுகள் சபை அது தொடர்பில் பரிசீலித்து வருகின்றது. எதிர்வரும் 18ஆம் திகதியின் பின்னர் மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கப்படலாம் என்று சிரேஷ்ட மின்சார பொறியியலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நந்திக்க பத்திரகே தெரிவித்தார். 02 பக்கம்



### உஷ்

சுற்றாடல் அமைச்சுப் பொறுப்பை யாருக்கு வழங்குவது என்று ஆலோசித்து வருகிறார் ரணில்.

நீதிமன்ற தீர்ப்புக்கமைய நஸீர் அஹமட் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து சென்ற பின்னர் அமைச்சுப் பதவியும் வெற்றிடமாவதால் கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்கே அதனை வழங்கலாமா என்று ஆலோசிக்கிறார் ஜனாதிபதி.

## சுகாதார...

நாளுக்கு நாள் வீழ்ச்சியை சந்தித்து வரும் இலவச சுகாதாரத்துறையை பாதுகாக்குமாறும் சேவைநலன் நிமித்தம் வைத்தியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் நேற்று (11) கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான வைத்தியர்கள் கலந்துகொண்டிருந்ததுடன் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

வைத்தியர்கள் முகங்கொடுத்துள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தருமாறும் இதன்போது போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

மேற்குறித்த ஆர்ப்பாட்டத்தின் ஒரு அங்கமாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக வைத்தியர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்குமாறும் சுகாதாரக் கட்டமைப்பை பாதுகாக்குமாறும் வலியுறுத்தி வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். இதனால் வைத்தியசாலை வீதியில் நேற்று வாகன நெரிசலையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, பெரும் எண்ணிக்கையிலான வைத்தியர்கள் இணைந்து பேரணியாக சென்று கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு அலுவலகத்தையும் நேற்று சுற்றிவளைத்திருந்தனர்.

சுகாதார அமைச்சுக்கு முன்பாக வைத்தியர்களினால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் காரணமாக கொழும்பு டீன்ஸ் வீதி போக்குவரத்து ஒரு மணிநேரத்துக்கு மேலாக தடைப்பட்டிருந்தது.

போராட்டக்காரர்கள் தேசிய வைத்தியசாலைக்கு அருகிலிருந்து பேரணியாக சென்று சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். இதன்போது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை தொடர்ந்து வைத்தியர்கள் பிரதான வீதியை மறித்து வீதிமறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

## கோட்டாவின்...

வழங்கவேண்டியது ஜனாதிபதியின் கடமை என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்ரசேன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (11) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரோஹித அபேகுணவர்தன, நான் உள்ளிட்ட மாவட்ட தலைவர்கள் பலர் இந்த அரசாங்கத்தை ஸ்தாபிக்க பல அர்ப்பணிப்புகளை செய்துள்ளோம். அதனால், தமக்கு சரியான இடம் வழங்கப்படவில்லை என்ற நிலைப்பாடு அவர்கள் மத்தியில் இருக்கிறது. அதேபோன்று, அவர்களினூடாக நாட்டுக்கு எந்தவொரு பயனும் எடுத்துக்கொள்வதில்லை என்ற பிரச்சினையும் இருக்கிறது. அதனை மீண்டும் மீண்டும் கூறவேண்டிய அவசியம் இல்லை. இதுதொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

நாடு பாரிய வீழ்ச்சியை சந்தித்தபோதே தற்போதைய ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்றுக்கொண்டார். ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவுமே அவருக்கு நாட்டை ஒப்படைத்தோம். பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் அவர் அந்த செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். அதற்கு அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று, அரசியல் ரீதியாகவும் கட்சி அடிப்படையிலும் முகாமைத்துவ பணிகளை முன்னெடுத்தால் இதுபோன்ற சர்ச்சைகள் ஏற்படாது. அதனால் அதற்கான பொறுப்பை ஏற்று செயற்படுவார் என்று நம்புகிறோம்.

நிலைமையை புரிந்துகொண்டே ரணிலை ஜனாதிபதியாக நியமித்தோம். அதனடிப்படையிலேயே எந்தவொரு பேதமுமின்றி பொதுஜன பெரமுனவின் ஆதரவை வழங்கி வருகிறோம். அந்த ஆதரவை பெற்றுக்கொண்டது போன்று மறுபுறம் தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லாமல் ஜனாதிபதியை நெருக்கடிக்குள்ளாக்கவும் அரசாங்கத்தை மாற்றவும் நாங்கள் நடவடிக்கை எடுக்க மாட்டோம். பொதுவான தீர்மானங்களையே எடுப்போம்.

மன கஷ்டத்துக்கான ரோஹித அபேகுணவர்தன போன்று சகலரும் சில கருத்துகளை முன்வைப்பர். இருந்தபோதும் இதுதொடர்பிலும் கட்சி பங்காளிகளின் செயற்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஏற்றுக்கொள்ள முடியாத ஒருசில கொள்கைகளின் காரணமாகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் அரசாங்கமும் நெருக்கடிக்குள்ளாகியது. அப்போதே இதுபோன்ற தீர்மானங்கள் நன்மையை தராது என்பதை புரிந்து கொண்டோம். ஜனாதிபதியும் அரசாங்கமும் மக்களின் எதிர்பார்ப்புகளும் அப்பால் செயற்படுகிறார்கள் என்றால் அதுதொடர்பில் தெளிவாக கலந்துரையாடுவோம். அதுவே எங்களின் பொறுப்பாகும். அதற்கு அப்பால் தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தை தோற்கடிக்க முயற்சிக்க மாட்டோம் என்றார்.

## மின்கட்டண...

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சார சபையை பொறுத்தவரையில் காலநிலை சாதகமாகவுள்ளது. சமனலவெவ பிரதேசத்துக்கே 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது. நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் அதிகரித்து வருகின்றன. அண்ணளவாக 23 – 24 ஜிகாவோட் மின்உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய நிலை உருவாகியுள்ளது. மற்றைய மின் உற்பத்திகள் நூற்றுக்கு 40 – 60 சதவீதமாக இருந்து வருகின்றது. கடந்த காலங்களில் எரிபொருளுக்கு அதிகம் செலவு செய்திருந்தோம். இருந்தபோதும் புதுப்பிக்கத்தக்க சக்தி இன்னும் கீழ்மட்டத்திலேயே உள்ளது.

இந்நிலையில் மின்கட்டணத்தை பொறுத்தவரையில், கட்டணம் அதிகரிக்கப்படுமா என்ற பிரச்சினை சகலரின் மத்தியிலும் தோற்றம் பெற்றுள்ளது. சட்டத்தின் பிரகாரம் கட்டண அதிகரிப்பு தொடர்பில் மக்களின் கருத்தை பெறும் செயற்பாடுகளை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றது. மக்கள் கருத்து பெறும் செயற்பாடுகள் எதிர்வரும் 18ஆம் திகதி நிறைவடையவுள்ளன.

சாதகமான முறையில் மழைவீழ்ச்சி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே கடந்த ஜூலை மாதம் மின் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்திருந்தோம். அதன்போது, கடும் வறட்சியும் நிலவியது. ஆனால் எங்களின் எதிர்பார்ப்புக்கு அப்பால் நீண்ட நாட்கள் கழிந்தே இம் மழைவீழ்ச்சி கிடைக்க ஆரம்பித்தது. நீர் மின் உற்பத்திக்கு எதிர்பார்த்தளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறாமையினால் ஏற்பட்டுள்ள நிதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான அவசியமும் மின்சார சபைக்கு இருக்கிறது. அதன் காரணமாகவே ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து 22 சதவீதத்தால் மின் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டிருந்தது.

முகாமையாளர்களுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது இரு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முதலாவது யோசனை, 22 சதவீதத்தால் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் 07 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இவ்விரு யோசனைகளிலும் எது சரியான யோசனை என்பதை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை கேட்டறிந்ததன்பின்னர் அதுதொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும். இருந்தபோதும், நிதி பற்றாக்குறைக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள வேறு மாற்றுத் தீர்வுகளும் இல்லாத நிலைமை உருவாகியுள்ளது.

அதற்கு காரணம், மின்சார சபைக்கு நிதி விடுவிக்கப்போவதில்லை என்று திறைசேரி அறிவித்திருக்கிறது. அதற்கமைய, நிதிப் பற்றாக்குறையை மின்சார சபையே நிவர்த்தி செய்துகொள்ள வேண்டிய நிலைமையே இருக்கிறது. இதன் காரணமாகவே ஒவ்வொரு முறையும் கட்டண திருத்தத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கட்டண திருத்தம் இடம்பெறும் என்றாலும் அவசர நிலைமைகளின்போதும் கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதற்கான கோரிக்கையை முன்வைப்பதற்கு சட்ட அங்கீகாரம் இருக்கிறது. அதனுடன் இணைந்த வகையிலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் வரை இதே நிலைமையில் பயணிக்க கூடியதாக இருக்கும் என்று மின்சார சபையின் முகாமைத்துவம் சுட்டிக்காட்டியுள்ளது. புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி மேம்படுத்தப்படும் வரை மின்கட்டண அதிகரிப்பை சந்திக்க நேரிடும். அதன் காரணமாகவே புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்று கோருகிறோம் என்றார்.

## பகிடிவதையைத்...

இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். பல்கலைக்கழக பகிடிவதையை தடுப்பதற்காக தேசிய குழுவொன்றும் நியமிக்கப்படும்.

பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு வாட்ஸ் அப் இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த இலக்கத்துக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்தவண்ணமுள்ளன. மேலும் இந்த இலக்கத்துக்கு கிடைக்கப்பெறும் சகல முறைப்பாடுகள் தொடர்பிலும் உடனடி விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

## சீனக்கப்பல்..

இந்தியாவின் பிரச்சினை என்றும் அது இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் இருப்பதால் அதில் புதுடில்லி ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாகவும் இந்திய அமைச்சர் ரணிலிடம் திட்டவட்டமாக தெரிவித்தாரென உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் நேற்றிரவு 'தமிழன்' நாளிதழிடம் தெரிவித்தன.

**03 ஒப்பந்தங்கள் கைசாத்து**

இதேவேளை இந்திய - இலங்கை உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகளை பலப்படுத்திக்கொள்ளும் வகையிலான 03 ஒப்பந்தங்களும் நேற்று கைச்சாத்திடப்பட்டன.

அதேபோல் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டத்தை இணையத்தின் ஊடாக திறந்துவைக்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டத்தின் நான்காவது அத்தியாயத்தின் கீழ் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 1.026 மில்லியன் ரூபாவை 2.8 மில்லியன் ரூபாவாக அதிகரித்துக்கொள்வதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் 09 திட்டங்களை விரைவில் நிறைவு செய்வதற்கு அவசியமான மேலதிக ஒதுக்கீடுகளை இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளதோடு அதற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

அதன்கீழ் வடக்கு மாகாணத்தின் 27 பாடசாலைகளை மேம்படுத்தல், மன்னார் மற்றும் அநுராதபுரம் வீடமைப்புத் திட்டங்கள், ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் புஸ்ஸல்லாவை சரஸ்வதி மத்திய கல்லூரியின் அபிவிருத்தி பணிகள், பொலன்னறுவையில் பல்லின - மும்மொழிப் பாடசாலையொன்றை நிர்மாணித்தல், யாழ்ப்பாணத்தில் மழைநீரை சேகரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழான 2ஆயிரத்து 889 நிர்மாணிப்புகள், தம்புள்ளையில் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கான 5ஆயிரம் மெட்ரிக் தொன் கொள்ளளவுடைய குளிரூட்டி வசதிகள் அமைத்தல், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு புதிய சத்திரசிகிச்சை பிரிவொன்றை நிறுவுதல் உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் விரைவில் நிறைவு செய்யப்படவுள்ளன.

அதேபோல் இலங்கையின் தேசிய பால் உற்பத்தியை பலப்படுத்தும் வகையில் இந்தியாவின் குஜராத் கூட்டுறவு பால் விற்பனை சம்மேளனமான (அமுல் குழுமம்) மற்றும் இலங்கையின் காகீல்ஸ் கூட்டு வர்த்தக நிறுவனம், இந்திய தேசிய பால் உற்பத்தி ஊக்குவிப்பு சபை ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ள கூட்டு வேலைத்திட்டத்துக்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் பலனாக கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இந்நாட்டின் கால்நடை வளர்ப்புத் துறையை மேம்படுத்துவதற்கான நிதியுதவிகள் கிடைக்கவுள்ளன. அத்தோடு, முதல் ஐந்து வருடங்களில் பால் உற்பத்தியை 53% வீதத்தினால் அதிகரித்துக்கொள்ளவும் 15 வருடங்களில் இலங்கையை பால் உற்பத்தியில் தன்னிறைவான நாடாக மாற்றும் நோக்கத்துடனும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன் கீழ் கால்நடைகளுக்கு அவசியமான உயர்தர மருந்துகள் மற்றும் உணவு, தொழில்நுட்ப உதவிகளை வழங்கி 02 இலட்சம் பால் உற்பத்தியாளர்களை வலுவூட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கால்நடை வளர்ப்புத் துறையை டிஜிட்டல் மயமாக்குதல், பால் உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்கான தொழில்நுட்பங்களுக்கான முதலீடுகள் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரதிபலன்கள் கிட்டும். இதன்போது இலங்கை - இந்திய உறவுகளுக்கு 75 வருடம் பூர்த்தியாவதையிட்டு விசேட நினைவுச் சின்னமொன்றும் வெளியிடப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் புனீத் அகர்வால் ஜே.பீ.சிங், இலங்கைக்கான இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே, இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரகு புரி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் தேனுக விதான கமகே, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஸ்வரன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## எம்.பியாகிறார்...

ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்துக்கான ஒன்பதாவது பாராளுமன்ற உறுப்பினராக அலிஸாஹிர் மௌலானா தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருந்து கொள்வனவில்...

அரசாங்கமும் சுகாதார அமைச்சும் பொறுப்புக் கூற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தரம்குறைந்த மருந்துப் பொருட்கள் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

சுகாதார அமைச்சருக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டு 03 நாட்களாக விவாதங்கள் இடம்பெற்றபோதும், தரம் குறைந்த மருந்து மாபியா மற்றும் தரக்குறைவான மருந்துகளை நாட்டுக்கு கொண்டு வந்து மக்களை மரணப் படுக்கைக்கு கொண்டு செல்ல 113 பேர் விருப்பம் தெரிவித்தனர். போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இம்யூனோகுளோபுலின் மருந்து நாட்டுக்கு கொண்டு வரப்பட்டு இந்நாட்டில் பல நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த மருந்தினது நரம்பியல் வலி, மூட்டுகள் மற்றும் இதய நோய்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை தொடர்புடைய வைத்திய நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த மருந்துகள் கிடைக்காவிட்டால், சில நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதாகவும் Myasthenia Gravis எனும் நோய் தீவிரமடையும்போதும் இந்த மருந்தே பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இந்த தரக்குறைவான மருந்து வழங்கப்பட்ட பல நோயாளர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கத்தின் பதில் என்ன என கேட்க விரும்புகிறேன். அரசாங்கம் நட்பு வட்டார முதலாளித்துவத்தை முதன்மைப்படுத்தி, அரசியல் சூதாட்டங்களை நடத்தி, தேர்தலை நிறுத்தும் அரசியல் மோசடிகளில் ஈடுபட்டு, நாட்டு மக்களையும் மரணப் படுக்கைக்கு கொண்டு செல்கின்றது. இந்த மோசடிக்கு ஜனாதிபதியே பொறுப்பு கூற வேண்டும். ஊழல் மிக்க சுகாதார அமைச்சரை இப்போதே ஜனாதிபதிக்கு நீக்க முடியும். என்றாலும், ஜனாதிபதி அதை செய்யமாட்டார். அரசாங்கம் மக்கள் மீது வரிகளை சுமத்தி, மருந்துப்பொருள் கடத்தல் மூலம் மக்களின் பணத்தை வீணடிக்கிறது. எனவே, இச்செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து இதற்குக் காரணமான சுகாதார அமைச்சரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த குற்றச் செயலில் ஈடுபட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நீதியை நிலை நாட்ட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அரசியல்...

இலக்கு வைத்து குறுகியகால வேலைத்திட்டமாக இருக்காது என்பதுடன் தேசத்தை உயிர்ப்பிப்பதற்காக சகலரையும் நேர்மையான முறையில் ஒன்றுதிரட்டி நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவே முயற்சிக்கிறோம் என்று மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைமை அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (11) கொழும்பில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். கட்சியின் போசகராக ஹேமகுமார நாணயக்கார செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை அரசியலில் நேரடியாக பங்காற்றுவதற்கு நீண்டகாலமாக முயற்சித்து வருகின்றோம். குடும்ப பின்னணியின் காரணமாக நான் சிறு வயதிலிருந்தே அரசியலில் ஆர்வம் கொண்டவராக இருந்து வருகிறேன். எனது தந்தை இடதுசாரி அரசியல் கொள்கையுடன் நேரடியாக செயற்பட்டவர் என்றாலும் அவர் தேர்தலில் போட்டியிடவில்லை. நாட்டின் இருப்பு, அபிவிருத்தி மற்றும் எதிர்காலம் என்பன அரசியலை அடிப்படையாக கொண்டே அமைந்துள்ளது என்று நானும் நம்புகிறேன். அதற்கமைய, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எங்களின் நம்பிக்கைக்கு ஏற்ப எங்களால் முடிந்தளவு, நாங்கள் சரியென புரிந்துகொண்டளவுக்கு தீர்மானங்களை எடுத்து செயற்பட்டு வந்துள்ளோம்.

ஆரம்ப காலத்திலிருந்து எனக்கு இருக்கும் அரசியல் ரீதியான நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் இல்லை. சகலரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதே முக்கிய அம்சமாகும். நான் சட்ட பீடத்தில் கற்ற காலத்திலிருந்தே சகலரையும் ஒற்றுமைப்படுத்தும் திட்டத்தில் வெற்றிக் கண்டுள்ளேன்.

சமூக ஊடகங்களில் என்னைப் பற்றி பல்வேறு நிலைப்பாடுகளை வெளியிடுகிறார்கள். அவர்களுக்கு நான் கூற விரும்புவது, என்னை அடையாளம் கண்டுகொண்டீர்கள் என்றால் உங்களில் ஒருவனாகவே நானும் இருப்பேன்.

அதற்கு காரணம் எமது நிலைப்பாடுகள் முற்றிலும் தூரநோக்குடையவையாக இருக்கின்றன. நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். சகலரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் ஒன்றுபட வேண்டும்.

ஒவ்வொரு நாட்டுக்கும் அவர்களுக்கே உரித்தான தனித்துவமான பாரம்பரியமும் நாகரீகமும் இருக்கின்றது. அதேபோன்று எமக்கும் தனித்துவமான நாகரீகம் இருக்கிறது. அந்த நாகரீகம் சிங்கள பௌத்தம் என்பதை மறந்துவிடக் கூடாது. அதற்காக அதனை தவறுதலாக புரிந்து கொள்ளக் கூடாது. இப்போதாவது இதற்கு சரியான மாற்று அர்த்தமுள்ள கருத்தொன்று உருவாக்கப்படவேண்டும். இலங்கையின் கலாசாரம் என்னவென்பதை புரிந்து கொள்ளவேண்டும். அதன்பொருள், பிறப்பில் பௌத்தராகவோ சிங்களவராகவோ இருப்பதால் ஏற்படும் இனம் மற்றும் சமயத்துடன் தொடர்புடையது இல்லை என்பதை அடித்துக்கூறுகிறேன்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என சகல மக்களும் இலங்கை கலாசாரத்தின் பங்குதாரர்களாவர். இவ்வாறான மாற்று அர்த்தம் கொண்ட கருத்து சமூகத்தை சென்றடைந்தால் மாத்திரமே உண்மையாகவே ஒன்றுபடக் கூடிய நிலைமையை உருவாக்கிக் கொள்ள முடியும். அவ்வாறு இல்லாவிட்டால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதனை தவறாக புரிந்து கொள்வதால் மக்களிடையே தேவையில்லாத பிரச்சினைகள் உருவாகுமே தவிர நாட்டை கட்டியெழுப்ப முடியாது. நாட்டை கட்டியெழுப்பவேண்டுமெனில் இன பேதம் இன்றி ஒன்றுபட வேண்டும். என்னுடன் இருக்கும் நண்பர்களுக்கு இந்த விடயம் நன்கு புரியும். சகலரும் ஒன்றுபடாவிட்டால் நாடென்ற அடிப்படையில் முன்னேறிச்செல்வது பிரச்சினைக்குரிய விடயமாகவே இருக்கும். இரண்டாவதாக, நாட்டின் அபிவிருத்திக்கும் தேசிய ஒற்றுமை அவசியம். மனித வலு முதலீட்டை ஒன்றுசேர்க்க முடியாத நிலை இன்று நாட்டில் இருக்கிறது. அதற்கு காரணம், சகலரும் ஒற்றுமையாக ஒரு இடத்தில் ஒன்றுபடாவிட்டால் எப்போதும் முன்னோக்கிச் செல்லமுடியாது.

மேலும், நாட்டை கட்டியெழுப்புவதற்கும் அபிவிருத்திருக்கும் இலங்கை ஒரு விவசாய நாடாக மாறவேண்டும். அதற்காக சகலரும் விவசாயிகளாக வேண்டும் என்பது அதன் பொருளில்லை. அரசினதும் நாட்டினதும் ஆற்றல் விவசாயம் என்ற கருத்தில் உள்ளடங்க வேண்டும்.

இந்தக் கட்சி புதிய அரசியல் பயணத்துக்கான அடித்தளமாக இருக்குமே தவிர எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் அல்லது ஏனைய தேர்தல்களை இலக்கு வைத்து குறுகியகால வேலைத்திட்டமாக இருக்காது. தேசத்தை உயிர்ப்பிப்பதற்காக சகலரும் நேர்மையான முறையில் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவே முயற்சிக்கிறோம்.

தற்போது நாட்டிலுள்ள அரசியல் நிலைமை, அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகளுக்கு புதிய வழியையும் கலாசாரத்தையும் பெற்றுக்கொடுப்பதே எங்களின் நோக்கமாகும். அரசியலுக்கான புதிய அர்த்தங்களையும் புதிய நடத்தைகளையும் அறிமுகப்படுத்துவதுமே இதன் நோக்கமாகும். அதனூடாகவே தேசத்துக்கு ஏற்பட்டுள்ள சேதம், ஊழல்களினால் ஏற்பட்டுள்ள அழிவு என்பவற்றை தவிர்த்துக்கொண்டு மிகவும் நேர்மையாக, திறந்த, இயற்கையான பயணத்தை ஆரம்பிக்க கூடியதாக இருக்கும்.

நாட்டிலுள்ள பொருளாதார பிரச்சினைகளுக்கு விஞ்ஞான பூர்வமாகவும் தர்க்க ரீதியாகவும் தீர்வுகளை பெற்றுக்கொடுத்து அதற்காக முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச யோசனைகளுக்கு அப்பால் சென்று மிகவும் பிரபல்யமான தீர்வுகளை ஒரு குழுவாக பெற்றுக்கொடுக்க முடியும் என்று நம்புகிறோம். அதேபோன்று இந்த பயணத்தில் மக்களுக்கு சிறந்த, உண்மையான அரசியல் கலாசாரத்தை பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் நம்புகிறோம். மேலும், எதிர்வரும் தேர்தல்களின்போது மக்கள் அவர்களுக்கு ஏற்றவாறு தீர்மானங்களை எடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

முக்கியமாக இளைஞர்களே எங்களின் பலமாகும். இளைஞர்களை அடிப்படையாகக் கொண்டே எங்களின் பயணம் தொடரும். எங்களின் இந்த பயணத்துக்கு சிறந்த வரவேற்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அதேபோன்று எமது வலய நாடுகளுடன் அரசியல் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்கவும் முடியுமாக இருக்கும் என்றார்.

## 05 வயதுக்கு...

ஐந்து வயதுக்குக் குறைவான சிறுவர்கள் உயிரிழக்கும் எண்ணிக்கையை 2030ஆம் ஆண்டில் புதிதாக பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் 07 சதவீதமாக முகாமைத்துவம் செய்வதற்கு இலக்கு வைக்கப்பட்டிருந்தது.

2021ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரையில் ஆயிரத்துக்கு 10.5 சதவீதமாக இருந்த இந்த உயிரிழப்பு வீதம், 2022ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியாகும்போது 12.3 சதவீதமாக உயர்ந்துள்ளமை அந்த கணக்காய்வில் உறுதியாகியுள்ளது.

அதேபோன்று தாய்மார்களின் உயிரிழப்பு வீதம் ஒரு இலட்சத்துக்கு 29.5 வரையிலும் ஒரு மாதத்துக்கும் குறைவான குழந்தைகளின் உயிரிழப்பு வீதம் ஆயிரத்துக்கு 6.8 சதவீதம் வரையிலும் அதிகரித்திருந்ததாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் – பலஸ்தீன மோதல்...

வன்மையாகக் கண்டிக்கின்றது. தொடர்ச்சியாக அப்பாவி மனித உயிர்கள் கோரமாகக் கொலை செய்யப்பட்டு, காஸா பகுதியில் வசிக்கும் குடிமக்கள் மீது கற்பனை கூட செய்ய முடியாதளவுக்கு கொடுமை இழைக்கப்பட்டு, பண்டைய உலக நாகரிகமொன்றின் "தொட்டில்" ஆகக் கருதப்படும் பிராந்தியத்தில், புனிதத் தலத்தைச் சூழவுள்ள பாரிய நிலப் பரப்பில் அவர்களது சன்மார்க்க வணக்க வழிபாட்டு உரிமையும் மறுக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு வருவது மனிதகுலத்தை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பலஸ்தீன மக்களை பலவந்தமாக அங்கிருந்து வெளியேற்றுவது, காரண, காரிய தொடர்பின்றி கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பது மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் வதை செய்வது என்பன ஐக்கிய நாடுகளின் சாசனத்தைக் கூட அலட்சியம் செய்து, மனித உரிமைகளை மீறி நடப்பவர்களின் உள்ளங்கள் மீது படிந்துள்ள அப்பட்டமான கறையாகும்.

முன்னெப்போதும் இல்லாதவாறு, அண்மைய மாதங்களில், தொடர்ந்து ஆத்திரத்தைத் தூண்டும் விதத்தில் இருந்து வரும் அனைத்து பயங்கரவாத செயல்களையும் கண்டிக்கும் அதேவேளையில், இரு நாடுகளின் நிலைபேறான மற்றும் நடைமுறைச் சாத்தியமான ரீதியான தீர்வை அடையும் நோக்கில், அனைத்து தரப்பினரும் நிதானத்தை கையாண்டு, நல்லெண்ணத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, 1967க்கு முந்தைய எல்லைக்குள் வரையறுத்து அமைதியும் செழிப்பும் நிலவத்தக்கதாக முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போதைய இஸ்ரேலிய தலைமைகள் ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் காண்பதற்கு முயற்சித்துவரும் "புதிய மத்திய கிழக்கு" என்பது நூற்றாண்டுகாலமாக நீடிக்கும் பழமையான இந்த மோதலை மேலும் அதிகரிக்கவே செய்யும். மனித நெஞ்சறையில் உயிர் மூச்சு உள்ள வரை பலஸ்தீன மக்கள் சுதந்திரம் மற்றும் வழிபாட்டு உரிமை என்ற சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் உரிமைக்காக தங்கள் போராட்டத்தையும் வேட்கையையும் தொடர்வார்கள்.

ஆக்கிரமிப்பின் கீழ் அவதிப்படும் மக்களை மேலும் பின் தள்ளுவதற்காக சந்தேகத்துக்குரிய விதத்தில் நடந்து கொள்வோர் இராஜதந்திர தோற்றப்பாட்டை பயன்படுத்தும் விடயத்தில் அவர்களின் உள்நோக்கம் குறித்து, மத்திய கிழக்கு மற்றும் அரபு உலகில் உள்ள அனைவரும் மிகவும் கவனமாக இருக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

வெறுப்பு, வெறுப்பையே உண்டாக்கும். மேலும், போர்முனையில் ஒரு தரப்பினருக்கு எதிராக மற்றொரு தரப்பினரை ஊக்குவிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பலஸ்தீன மக்களுக்கு எதிராக வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் கொள்கைகளில் இரட்டை நிலைப்பாடுகள் வெளிப்படுகின்றன. இது இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தொடர்பான உத்தியோகபூர்வ அணுகுமுறையில் பெரிதும் பிரதிபலிக்கின்றது.

இலங்கையின் அண்டை நாடொன்று பிராந்தியத்தின் தலைமையாக இருக்க விரும்புவதாகத் தெரிகிறது. இவ்வாறான பேரழிவுகளின்போது, பொறுப்புள்ள சக்திகள், உலகளாவிய மற்றும் பிராந்திய ரீதியில் சற்று முதிர்ச்சியுடனும் விவேகத்துடனும் சமநிலையுடனும் செயல்படுவதே சாலச் சிறந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு கல்வி...

கண் நோய் ஏற்பட்டுள்ள மாணவர்கள் உடனடியாக பாடசாலைக்குப் பொறுப்பாகவுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்துக்கு அறிவித்து தேவையான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் பீ.ஆர். தேவபந்து சகல பாடசாலை அதிபர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

மேலும், பாடசாலைகளில் கண் நோய்க்குள்ளான மாணவர்களை ஏனைய மாணவர்களிடமிருந்து தனித்து வைக்குமாறும் அவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரியைச் சேர்ந்த 06, 07 மற்றும் 08ஆம் தரங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் கண்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்தே கொழும்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு மேற்கண்ட அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தின் பரிந்துரைக்கமைய நேற்று முன்தினம் (10) முதல் அந்த பாடசாலையின் சம்பந்தப்பட்ட வகுப்புகளின் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் நிமல் ஜயவீர தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரியில் கண் நோயினால் பாதிக்கப்பட்ட 35 மாணவர்கள் இருப்பதாகவும் இதனால் 06, 07 மற்றும் 08ஆம் தரங்களை இவ்வாரம் மூடுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக கொட்டாஞ்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பெத்தும் கொடிக்கார தெரிவித்துள்ளார்.

கண் நோய் மூன்று நாட்களுக்கு நீடிக்கும் என்றும் கண் சிவந்து அரிக்கும் உணர்வு காணப்பட்டால் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சையை பெற்றுக்கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது, சிறுவர்கள் மாத்திரமின்றி பெரியோர்களுக்கும் கண் நோய் பரவ ஆரம்பித்துள்ளது.

அதன் காரணமாக இந்நோய் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். கண்நோய் ஏற்பட்டுள்ள ஒருவரின் கண்ணீரினூடாக இன்னுமொருவருக்கு இலகுவாக வைரஸ் பரவலடையும் என்று பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

பொதுவாக, அதிக வெப்ப காலநிலையின்போதே கண்நோய் பரவலடையும் என்றாலும் தற்போது நிலவும் மழையுடனான காலநிலையிலும் இந்நோய் பரவலடைந்து வருவதாகவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## காஸாவில்...

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் இன்று (12) 6ஆவது நாளாகவும் நீடித்துவரும் நிலையில் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலெண்ட் காஸா மீது தரைவழித் தாக்குதலை முன்னெடுக்குமாறு பணித்துள்ளார். இந்நிலையில், நேற்று(11) ஒரு மணிநேரத்துக்குள் இஸ்ரேல் காஸா மீது 250 வான்வெளித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. ''காஸா ஒரு 'கூடார நகரமாக' மாறும். அங்குள்ள ஒவ்வொரு கட்டடமும் அழிக்கப்படும்'' என இஸ்ரேல் இராணுவ அதிகாரியொருவர் அறிவித்துள்ள நிலையில் காஸாவை சுற்றிலும் சுமார் 03 இலட்சம் துருப்புகளை இஸ்ரேல் நிலை நிறுத்தியுள்ளது.

இந்த இரு தரப்புக்குமான மோதலில் சிக்கி 3ஆயிரத்துக்கு அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதுடன் 9ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

**போரை நிறுத்த சர்வதேச நாடுகளுக்கு பலஸ்தீன்அழைப்பு**

இந்நிலையில், ஹமாஸ் - இஸ்ரேல் இடையேயான போரை நிறுத்த பலஸ்தீன அரசு சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அத்தோடு காஸா நகரில் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யுமாறும் பலஸ்தீன மக்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைப்பதை சர்வதேச நாடுகள் உறுதி செய்யவும் வலியுறுத்தியுள்ள பலஸ்தீன அரசு இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக அங்கு அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது.

**இஸ்ரேல் குண்டு வீச்சில் 09 ஐ.நா. ஊழியர்கள் பலி**

இஸ்ரேலின் விமானப் படைத் தாக்குதலில் காஸாவில் ஐ.நா. ஊழியர்கள் 09 பேர் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. தகவல் தெரிவித்துள்ளது. எரிபொருள் தீர்ந்ததால் காஸாவிலுள்ள மின்னுற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. மின்சாரம் இல்லாததால் காஸா வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவோர் தவித்து வருகின்றனர். காஸா பகுதியில் சுமார் 18 இலட்சம் பேர் உணவு, குடிநீர், மின்சாரமின்றி தவித்து வருகின்றனர்.

**இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் இந்தியா**

இஸ்ரேல் – ஹமாஸ் போரில் அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் கனடா உட்பட மேற்கத்தேய நாடுகள் பல இஸ்ரேலுக்கு ஆதரவளித்துவரும் நிலையில் தற்போது இந்தியாவும் இஸ்ரேலுக்கு துணைநிற்பதாக அறிவித்துள்ளது.

**எந்தவகையான உதவிகளையும் வழங்கத்தயார் - ஜோ பைடன்**

இஸ்ரேலையும் அந்நாட்டு மக்களையும் காப்பாற்ற எந்தவகையான உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு நாடுகளுக்கிடையேயான உறவு ஆழமாக இருப்பதால், இஸ்ரேலின் சோகத்தில் அமெரிக்கா பங்கு கொள்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக யூத எதிர்ப்பு மற்றும் யூத மக்களை துன்புறுத்துவது தொடர்ந்து வருகிறது. இஸ்ரேல் மீதான தாக்குதலைத் தொடர்ந்து உள்நாட்டு அச்சுறுத்தல்களை உன்னிப்பாக கவர்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**இஸ்ரேலில் தரையிறங்கிய அமெரிக்க விமானம்**

மறுபுறம், மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்க படைகளை குவிக்கத் தயாராகவுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹுவிடம் தொலைபேசியில் உரையாடலினூடாக தெரிவித்துள்ளார். மேலும் போருக்கு உதவும் வகையில் அமெரிக்க ஆயுதங்களுடன் முதல் விமானம் இஸ்ரேலில் இறங்கியுள்ளது.

**மனித உரிமைகளுக்கு என்ன ஆனது? - துருக்கி**

இந்நிலையில், அமெரிக்காவின் தலையீடு குறித்து கருத்து தெரிவித்துள்ள துருக்கி ஜனாதிபதி எர்டோகன், "அமெரிக்கா இஸ்ரேலுக்கு விமானம் தாங்கி போர்க்கப்பலை அனுப்பியிருக்கிறது. அமெரிக்காவுக்கு இஸ்ரேலில் என்ன வேலை. காஸாவிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குண்டுமழை வீசுவதற்கே அமெரிக்கா இந்த வேலையில் இறங்கியிருக்கிறது. காஸாவுக்குள் தண்ணீர் செல்லும் பாதைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருக்கிறது. அங்கிருக்கும் வைத்தியசாலைகள் செயற்படும் நிலையில் இருக்கின்றனவா என தெரியவில்லை. துரதிர்ஷ்டவசமாக, வழிபாட்டுத்தளங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் என கருணையின்றி குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கிறது. உலகம் இதை அமைதியாக வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. யாரும் எதுவும் சொல்வதில்லை. மனித உரிமைகளுக்கு என்ன ஆனது?," எனத் தெரிவித்துள்ளார்.

**லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதல்**

ஹமாஸ் அமைப்புக்கு கட்டார், ஈரான் உட்பட பல மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ரஷ்யா, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

காஸா பகுதியை தொடர்ந்து லெபனான் மீதும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. லெபனானிலிருந்து பீரங்கி மூலம் குண்டுகள் வீசப்பட்ட நிலையில் இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

**காஸா வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு**

காஸாவிலும் இஸ்ரேல் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. படுகாயமடைந்தவர்கள் குவிவதால் காஸாவில் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன.

அங்கு படுக்கைகள், மருந்துகள் இல்லாததால் 05 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீன மக்கள் தவித்து வருகின்றனர். 10 மணி நேரம் மட்டுமே மின் விநியோகம் நீடிக்கும் என்பதால் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு எரிபொருளின்றி காஸாவில் இயங்கிவரும் மின் உற்பத்தி நிலையங்கள் மூடப்படும் அபாயத்திலுள்ளன.

காஸாவில் இலட்சக்கணக்கான மக்கள் ஏற்கனவே குடிநீர், உணவு இன்றி தவித்து வருகின்றனர். காஸாவில் இஸ்ரேல் படைகள் தொடர் தாக்குதல் நடத்தும் நிலையில் உயிரிழப்புகள் உயர்ந்து வருகின்றன.

# தொழில்நுட்ப, பசுமைப் பொருளாதார வேலைத்திட்டம்

## இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி தனியார் துறையினருக்கு அழைப்பு



தொழில்நுட்பம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்தும் வேலைத் திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு தனியார் துறையினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்த அழைப்பு விடுத்தார்.

தேசிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக செயல்முறை முகாமைத்துவத் தொழில் கண்காட்சியை நேற்று (11) முற்பகல் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தேசிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக முகாமைத்துவ வாரத்தை (National IT and BPM Week) ஆரம்பித்துவைக்கும் முகமாக இந்தக் கண்காட்சி , ஒக்டோபர் 11, 12 மற்றும் 13ஆம் திகதிகளில் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்றது.

டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்தும் திட்டத்தை விரைவுபடுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன், தகவல் தொழில்நுட்ப தொழில்முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் புதிய தொழில்நுட்பம் குறித்து அறிவை வழங்குதல், திறன் மேம்பாடு, தொழில் ஆலோசனை மற்றும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

மேல் மாகாணத்தில் (சா/தரம் மற்றும் உ/தரம்) கற்கும் பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்கல்வி நிறுவன மாணவர்கள், தொழில் வாய்ப்புகளை எதிர்பார்த்துள்ளவர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை தெளிவூட்டும் நோக்கில் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

03 நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், தொழிற்றுறை மற்றும் தொழில் ஆலோசனை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை, வதிவிடப் பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கான தளத்தை வழங்குவதோடு, தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களால் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறைகள் குறித்த செயலமர்வுகளும் நடத்தப்படும்.

# ஜனாதிபதி தலைமையில் கலாபூஷணம் அரச விருது வழங்கும் விழா



கலைத்துறையின் மேம்பாட்டுக்காக உன்னதமான சேவையாற்றிய கலைஞர்களை கௌரவிப்பதற்கான கலாபூஷணம் அரச விருது வழங்கல் விழா 2022 ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் (11) மஹரகம இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்றது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சினால் 38ஆவது தடவையாக இந்த விருது வழங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நாட்டின் கலைஞர் ஒருவருக்கு கிடைக்கும் உயரிய விருதான கலாபூஷணம் இம்முறை நாடளாவிய ரீதியிலுள்ள 200 கலைஞர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த ஆரம்ப விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட கலைஞர்களுக்கு கலாபூஷணம் நாமம், விருது, சான்றிதழ் ஆகியவற்றுடன் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

# யாழ். முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாண மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

அண்மைய நாட்களில் யாழ். மாவட்டத்தில் இணைய செயலி மூலம் முச்சக்கர வண்டி சேவையினை மக்கள் பயன்படுத்தி வருவதன் காரணமாக தாம் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாகவும் அதனை நிவர்த்தி செய்யுமாறு கோரியுமே இப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை பண்ணையில் அமைந்துள்ள தூர இடங்களுக்கான பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமான பேரணி, யாழ். நகரில் உள்ள வீதி வழியாக வருகை தந்து இறுதியில் கடற்றொழில் அமைச்சரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்ததுடன் போராட்டம் நிறைவுற்றது.

# 178 கோடி ரூபா பெறுமதியான வாகனங்கள்; முகாம்களில் எவ்வித பயன்பாடுமற்ற நிலையில்

ஐ.நா. அமைதி காக்கும் திட்டப் பணிகளுக்காக 2017ஆம் ஆண்டு முதல் 178 கோடி ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட 42 வாகனங்கள் எந்தவித திட்டத்துக்கும் பயன்படுத்தப்படாமல் மூன்று விசேட அதிரடிப்படை தளங்களில் வைக்கப்பட்டுள்ளதாக அரச கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனங்கள் மற்றும் அதற்கு தேவையான பொருட்கள், உபகரணங்களை வாங்க ஐந்து ஆண்டுகளில் 178 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

விசேட அதிரடிப்படைக்கு சொந்தமான கட்டுகுருந்த, பயிற்சி பாடசாலை, ஹொரண மற்றும் கோனஹேன முகாம்களில் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 25ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** உங்கள் மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள்.

**ரிஷபம்:** குடும்பத்திலுள்ளவர்களுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உணர்வுகளை வெளிப்படுத்தத் தவிப்பீர்கள்.

**மிதுனம்:** கும்பிட்டுக் கூத்தாடியாவது உங்கள் காரியங்களைச் சாதிப்பீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள்.

**கடகம்:** பேசுவதைவிட மௌனமாக இருப்பதே மேல், கொடுத்த பணம், கொடுத்த வாக்கினை காப்பாற்ற முயற்சிப்பீர்கள்.

**சிம்மம்:** எதிர்பாராத நண்பர் சந்திப்பால் இலாபங்கள் உண்டு. உடல், மனம் இரண்டுமே சிறப்பாக இருக்கும்.

**கன்னி:** செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். தேவையற்ற விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**துலாம்:** தொழிலில் எதிர்பார்த்த வரப்பிரசாதங்கள் கிடைக்கும். கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரங்கள் சிறக்கும். சமூகத்தில் உங்கள் கீர்த்தி, செல்வாக்கு உயரும்.

**தனுசு:** நண்பர், உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி உண்டு. உங்கள் திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மகரம்:** வீண் பண, பொருள் விரயங்கள் ஏற்படும். கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள்.

**கும்பம்:** காதல், திருமணம் கைகூடி வரும். பங்கு வியாபாரத்தில் நினைத்த இலாபத்தினை அடைவீர்கள்.

**மீனம்:** நினைத்த காரியம் நிறைவேறும். நோய், கடன் நிவர்த்தி, எதிரிகள் பணிவாக நடந்து கொள்வார்கள்.

**திதி:** திரயோதசி பி.ப.7.54 பின் சதுர்தசி
**நட்சத்திரம்:** பூரம் மு.ப.11.36 வரை பின் உத்தரம்
**யோகம்:** மரண யோகம் பி.ப.11.36 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** மு.ப.10.57 – 11.57 மணி வரை
**ராகு காலம்:** 1.27 – 2.57 மணிவரை
**எமகண்டம் :** 5.57 - 7.27 மணிவரை
**குளிகை :** 8.57 - 10.27 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மகர-கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிர்ஷ்டம்:** அஸ்வினி,மகம்,மூலம் பரணி,பூரம்,பூராடம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** மாத சிவராத்திரி விரதம் - பிரதோஷம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325, 078-6759739**





திலித் ஜயவீரவின் தலைமையிலான மவ்பிம ஜனதா கட்சியின் தலைமை அலுவலகம் நேற்று (11) கொழும்பில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், கட்சியின் போசகரான ஹேமகுமார நாணயக்கார மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்பத் ஆகியோரும் கலந்துகொண்டனர். **படங்கள்: கிரிஷான் காரியவசம்**

# அஹுங்கல்லவில் இரு குழுக்களுக்கிடையில் அசிட் வீச்சு தாக்குதல்: அறுவர் காயம்

அஹுங்கல்ல பத்திராஜகமவில் நேற்று இரு குழுக்களுக்கிடையில் அசிட் வீச்சு மற்றும் கூரிய ஆயுதங்களால் மோதிக் கொண்டதில் ஆறு பேர்காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்த மோதலில் இரு குழுக் களிலும் தலா மூவர் என்ற வகையில் காயமடைந்துள்ளதுடன் அதில் மூன்று பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.ஒரு குழுவில் இருந்து வாளால் வெட்டி தாக்கியதில் மற்ற குழுவிலுள்ள ஒருவருக்கு கடும் காயமேற்பட்டதில் மற்றைய குழுவில் இருந்து அசிட் வீசியதில் ஐவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.தனிப்பட்ட தகராறு காரணமாக இரு குடும்பங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# இந்திய அரசின் 10ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்து



இந்திய அரசின் நிதியுதவியுடன் மலையகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 10ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், நேற்று முக்கிய சந்திப்புகளில் ஈடு பட்டதுடன், ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் ஆரம்பமாகவே 10ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் இலங்கை சார்பில் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்தியா சார்பில் கையொப்பமிட்டார்.

அத்துடன், இந்திய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள 126 வீடுகள், நிகழ்நிலை ஊடாக திறந்து வைக்கப்பட்டு, பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பதுளை, மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலேயே மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விடுத்த கோரிக்கையின் பிரகாரம், இந்திய அரசால் மலையகத்தில் ஏற்கனவே 04 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.இந்தியப் பிரதமர் மோடி, மலையகம் வந்திருந்தவேளை, 10ஆயிரம் வீடுகளுக் கான உத்தரவாதம் வழங்கப்பட்டது.

முன்னர் வீடொன்றுக்கு 10 இலட்சம் ரூபா உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் வீடொன்றுக்கு 28 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் வைரஸ் காய்ச்சல், டெங்கு பரவ வாய்ப்பு

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள பகுதிகளில் வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்கு போன்ற நோய்த் தொற்றுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. நீர் நிலைகள் மாசுபடுவதால் வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு போன்ற தொற்றுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளன.

இந்த அசாதாரண நிலை தொடர்பாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அத்தோடு குடிநீரில் வெள்ளநீர் கலக்கப்பட்டிருக்குமானால் சுத்திகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தொண்டு அமைப்புகளுடன் கைகோர்க்க பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் திட்டமிட்டுள்ளது.

உணவு வழங்கும் நிறுவனங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள், ஹோட்டல்களை பரிசோதனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் கணிசமாக அதிகரித்துள்ள நிலையில், இது தொடர்பில் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 ஒக்டோபர் 12ஆம் திகதி, வியாழக்கிழமை

# பலஸ்தீன பிரச்சினைக்கு தீர்வென்ன?

காஸாவில் புதிய தாக்குதலைத் தொடங்குவதற்கு பல்லாயிரக்கணக்கான வீரர்களை இஸ்ரேல், காஸாவின் எல்லையில் குவித்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுவரை வான் வழியாக மட்டுமே தாக்குதல் நடத்தி வந்த நிலையில் விரைவில் காஸா பகுதியில் தரை வழியாகத் தாக்குதல் நடத்துவதற்கு இஸ்ரேல் திட்டமிட்டிருக்கிறது.

ஆயுதமேந்திய வீரர்கள், காலாட்படை வீரர்கள், பீரங்கிப் படைகள் ஆகியோர் தவிர சுமார் 03 இலட்சம் ரிசர்வ் படைகளும் காஸா எல்லையில் குவிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கூறியுள்ளது.

முன்னதாக சிரியாவிலிருந்து இஸ்ரேல் நோக்கி ரொக்கெட்டுகள் வீசப்பட்டதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கூறியுள்ளது. இதேபோல் லெபனானில் இருந்து ஹிஸ்புல்லா இயக்கத்தினர் ரொக்கெட்டுகளை வீசியதாகவும் தெரிவித்துள்ளது.

விமானங்களை கண்காணிப்பதற்காக ஹமாஸ் இயக்கத்தினர் பயன்படுத்தி வந்த இடத்தை தாக்கி அழித்துவிட்டதாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது. சண்டையில் இதுவரை இஸ்ரேலிய தரப்பில் ஆயிரத்து 200 பேரும் காஸாவில் 950 பேரும் உயிரிழந்துள்ளனர்.

சனிக்கிழமையன்று முன்னெப்போதும் இல்லாத வகையில் இஸ்ரேல் மீது ஹமாஸ் ஒரு திடீர் தாக்குதலை நடத்தியது. பல மாதங்களாகவே மேற்குக் கரைப் பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. ஆனால், இம்மாதிரி ஒருங்கிணைக்கப்பட்ட, தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்தாத மரண தாக்குதலை காஸாவிலிருந்து யாருமே எதிர்பார்க்கவில்லை.

சமீப மாதங்களில் மேற்குக் கரைப் பகுதியில் தினமும் வன்முறைச் சம்பவங்கள் நடந்துவருகின்றன. சனிக்கிழமைத் தாக்குதலுக்கு முன்பே, இந்த ஆண்டில் மட்டும் 200 பலஸ்தீனர்களும் 30 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். பெஞ்சமின் நெதன்யாஹுவின் அரசு, இந்த வன்முறையை பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. இஸ்ரேலில் நீதித்துறையை முழுமையாக மாற்றியமைப்பது போன்ற மற்ற விவகாரங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது.

காஸாவில் உள்ள நிலைமையை “ஸ்திரமான ஸ்திரத்தன்மையின்மை” என்று குறிப்பிட்ட இஸ்ரேலிய இராணுவம், நிலைமை கொந்தளிப்பாக இருந்தாலும் கட்டுக்குள் இருப்பதாகக் குறிப்பிட்டது. இதற்குப் பிறகுதான், 1973இல் எகிப்தும் சிரியாவும் சேர்ந்து இஸ்ரேலைத் தாக்கிய யோம் கிப்பூர் யுத்தத்தை நினைவுபடுத்தும் விதத்திலான ஹமாஸின் தாக்குதல் நடந்தது. 1990களிலும் 2000களிலும் தற்கொலைப் படைத் தாக்குதல்களை நடத்திவந்த இஸ்லாமியப் போராளி அமைப்பான ஹமாஸ், இஸ்ரேலின் சமீபத்திய வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ஒரு கொடுந்தாக்குதலை நடத்தியது.


நவீன வரலாற்றிலேயே நீண்ட காலம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாக இருக்கும் பலஸ்தீனிய பிராந்தியம் ஒரு புகையும் எரிமலையாகவே இருக்கிறது. அமைதிக்கான எந்த நடவடிக்கையும் அங்கு இல்லை. மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்து கட்டுமானப் பணிகளைச் செய்துவருகிறது. பாதுகாப்புத் தடைகள், சோதனைச் சாவடிகள் ஆகியவற்றை அமைத்து பலஸ்தீனர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துகிறது. பலஸ்தீனர்களை தொடர்ந்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க பலப் பிரயோகம் செய்யவோ, கூட்டு தண்டனைகளை வழங்கவோ தயங்குவதேயில்லை. இந்த நிலை நீடித்துக்கொண்டே இருப்பது பலஸ்தீனர்களை இன்னும் தீவிர நிலைப்பாடுள்ளவர்களாகவும் ஹமாஸை இன்னும் வலிமையானதாகவுமே மாற்றியிருக்கிறது.

இஸ்ரேல் இப்போது யுத்தத்தை அறிவித்திருக்கிறது. ஆனால், தரை வழியாக ஊடுருவுவது, விமானத் தாக்குதல் போன்ற கடந்த காலத் தாக்குதல்கள் ஹமாஸை சிறிதும் பலவீனப்படுத்தவில்லை. சமீப ஆண்டுகளில் மேற்காசியப் பகுதிகளில் புவிசார் அரசியலில் சில அணிமாற்றங்கள் நடந்திருக்கின்றன. இஸ்ரேல், அரபு நாடுகளிடம் ஒத்துழைப்பு ஏற்பட்டிருக்கும் அதேநேரம், ஈரான் - சவூதி இடையிலான உறவுகளில் இருந்த இறுக்கம் தளர்ந்திருக்கிறது. ஆனால், இந்த மாற்றங்களின்போது மேற்காசியாவின் உண்மையான பாவச்செயலான பலஸ்தீனம் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது கண்டுகொள்ளப்படவில்லை. நிலைமை அப்படியே தொடரும்படி விடப்பட்டது.

இந்த நிலை இப்படியே நீடிப்பதால் மேலும் பல விளைவுகள் இருக்கும். அந்தப் பிராந்தியத்தில் நீடித்த அமைதியும் ஸ்திரத்தன்மையும் வர வேண்டுமென இஸ்ரேலும் பிராந்திய சக்திகளும் சர்வதேச நாடுகளும் விரும்பினால் பலஸ்தீனக் கேள்விக்கு தீர்வைத் தேடுவதில் கவனம் செலுத்த வேண்டும். பிரதானமான பிரச்சினைக்குத் தீர்வு காணுவதை விட்டுவிட்டு, இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவது மேலோட்டமான ஒன்றாகவே இருக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# இஸ்ரேல் - ஹமாஸ் மோதலால் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பது ஏன்?




இஸ்ரேல் மற்றும் காஸாவில் நடந்து வரும் தாக்குதல்கள் மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் உற்பத்தியை சீர்குலைக்கும் என்ற கவலை எழுந்துள்ளதையடுத்து உலகளவில் எண்ணெய் விலைகள் உயர்ந்துள்ளன.

சர்வதேச பெற்றோலிய மசகு எண்ணெய்களில் ஒன்றான ப்ரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 2.25 டொலர் அதிகரித்து 86.83 டொலராக இருந்தது. அதே நேரத்தில் அமெரிக்காவிலும் பெற்றோலிய மசகுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பகுதிகளில் பெருமளவு எண்ணெய் உற்பத்தி செய்யப்படுவதில்லை. ஆனால், மத்திய கிழக்கு நாடுகள் உலகளவில் நடைபெறும் எண்ணெய் விநியோகத்தில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பின் தற்போதைய தாக்குதல் பல ஆண்டுகளாகத் தொடரும் சண்டையின் மிகப்பெரிய ஒரு தாக்குதலாகும்.

மேற்கத்தேய நாடுகள் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. பலஸ்தீன போராளிக் குழுவான ஹமாஸின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், “உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடான ஈரான் ஹமாஸ் அமைப்புக்கு முழு ஆதரவு அளிக்கிறது” என்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நியூயோர்க்கில் நடந்த ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் ஈரான், தனக்கு இந்த தாக்குதலுடன் எந்தவிதத் தொடர்புமில்லை எனத் தெரிவித்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால், இந்த தாக்குதலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஆதரவு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பகுதிகளில் பெருமளவு எண்ணெய் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

திங்களன்று, இஸ்ரேல் அமெரிக்க எண்ணெய் நிறுவனமான செவ்ரானுக்கு நாட்டின் வடக்கு கடற்கரையில் உள்ள தாமர் இயற்கை எரிவாயு கிணற்றில் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்த உத்தரவிட்டது. இப்பகுதி காஸாவிலிருந்து எளிதில் தாக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

ஏற்கெனவே இதுபோல் பதற்றம் நிறைந்த காலங்களில் உற்பத்தியை நிறுத்த உத்தரவிட்ட நாட்டின் எரிசக்தி அமைச்சகம், இஸ்ரேலின் எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்ய மற்ற ஆதாரங்களில் இருந்து போதுமான எரிபொருள் இருப்பதாகக் கூறியது.

இஸ்ரேலின் மிகப்பெரிய கடல் எரிவாயு உற்பத்தி நிறுவனமான லெவியதன் வழக்கம் போல் தொடர்ந்து இயங்குகிறது என்று செவ்ரான் தெரிவித்துள்ளது.

எரிசக்தி தொடர்பாக ஆய்வுகளை நடத்திவரும் சவுல் கவோனிக் பிபிசியிடம் பேசியபோது, “அருகில் உள்ள முக்கிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளான ஈரான் மற்றும் சவூதி அரேபியா ஆகியவற்றுக்கும் இதுபோன்ற தாக்குதல் மற்றும் பதற்றம் பரவக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக உலகளாவிய எண்ணெய் விலை உயர்ந்துள்ளது'' என்று கூறினார்.

எண்ணெய் உற்பத்தி செய்யும் பிற நாடுகளுக்கும் தாக்குதல் பரவும் என்ற அச்சம் உலகளவில் அதிகரித்து வருகிறது.

திங்கட்கிழமை காலை, அமெரிக்காவின் வெஸ்டர்ன் டெக்சாஸ் இன்டர்மீடியட் மசகு எண்ணெய் விலை, ஒரு பெரலுக்கு 2.50 டொலர் அதிகரித்து 85.30 டொலராக இருந்தது.

“ஹமாஸ் தாக்குதல்களை ஆதரிப்பதாக ஈரான் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், ஈரானும் இத்தாக்குதலில் பங்கேற்றால், உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் 3% வரை பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது” என்று கவோனிக் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை மீறி ஈரான் இந்த ஆண்டு முழுவதும் எண்ணெய் உற்பத்தியை அதிகரித்து வருவதாக கேபிடல் எகனாமிக்ஸ் நிறுவனத்தின் தலைமைப் பொருளாதார நிபுணர் கரோலின் பெயின் பிபிசியின் டுடேவிடம் பேசியபோது தெரிவித்தார்.

“ஈரானிய உற்பத்தியில் நிலையான அதிகரிப்பை அமெரிக்கா கண்மூடித்தனமாக அனுமதித்து வருவதாகத் தெரிகிறது. அது ஈரான் இங்கிருந்து தொடர்ந்து முன்னேறுவதைப் புறக்கணிப்பதை அமெரிக்காவுக்கு மேலும் சிக்கலாக்கும்” என்று அவர் கூறினார்.

மூலதனப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, ஒட்டுமொத்தமாக ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில் எண்ணெய்க்கான தேவை விநியோகத்தை விட அதிகமாக இருக்கும் என்றும் அதனால் “எண்ணெய் விலை அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாது” என்றும் கரோலின் பெயின் தெரிவித்தார்.

முக்கியமான எண்ணெய் வர்த்தகப் பாதையான ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக எண்ணெய் விநியோகம் நடக்கும் நிலையில், உலகளாவிய விநியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கு அங்கேயே முடங்கிவிடும் என்று கவோனிக் கூறினார்.

எரிசக்தியை மட்டும் நம்பிக்கொண்டிருக்கும் வளைகுடா பிராந்தியத்தில் உள்ள முக்கிய ஏற்றுமதியாளர்களுக்கு ஹோர்முஸ் ஜலசந்தி மிகவும் முக்கியமானது.

எரிசக்தியை மட்டும் நம்பிக்கொண்டிருக்கும் வளைகுடா பிராந்தியத்தில் உள்ள முக்கிய ஏற்றுமதியாளர்களுக்கு ஹோர்முஸ் ஜலசந்தி மிகவும் முக்கியமானது.

வரவிருக்கும் நாட்களில் நிலைமை எப்படி இருக்கும் என்பதற்கான நிச்சயமற்ற தன்மையின் காரணமாக, அமெரிக்க திறைசேரிப் பத்திரங்கள் மற்றும் டொலரில் முதலீடுகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிக்கலான காலங்களில் இதை முதலீட்டாளர்கள் பாரம்பரியமாக கடைபிடித்து வருகின்றனர் என ஹெச்.எஸ்.பி.சி. (HSBC) வங்கியின் ஜேம்ஸ் சியோ கூறினார்.

சந்தைகளில் ஏற்பட்டுள்ள குழப்பமான நிலையைச் சமாளிக்கும் விதத்தில் 3000 கோடி அமெரிக்க டொலர்கள் வரையிலான வெளிநாட்டு நாணயத்தை விற்கப் போவதாகவும் மதிப்பு குறைந்து வரும் சொந்த நாணயமான ஷேக்கலின் மதிப்பை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இஸ்ரேலின் மத்திய வங்கி திங்களன்று கூறியது.

“இதுபோன்ற காலகட்டத்தில், பதற்றம் கொஞ்சம் அதிகரித்துள்ளது. முதலீட்டாளர்கள் இன்னும் கொஞ்சம் தெளிவு பெற விரும்புகிறார்கள். குறிப்பாக, பொருளாதார தரவு மற்றும் புவிசார் அரசியலின் நிச்சயமற்ற தன்மையுடன் தொடர்புடைய முன்னேற்றங்கள் குறித்து இந்த குழப்பம் ஏற்பட்டுள்ளது” என்று மேலும் பேசிய சியோ கூறினார். பெப்ரவரி 2022இல் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததைத் தொடர்ந்து, எண்ணெய் விலை உயர்ந்தது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு பீப்பாய் 120 அமெரிக்க டொலரைத் தாண்டியது.

இந்த ஆண்டு மே மாதத்தில் அந்த விலைகள் ஒரு பீப்பாய்க்கு 70 அமெரிக்க டொலர்களுக்கு சற்று அதிகமாகச் சரிந்தன. ஆனால் உற்பத்தியாளர்கள் சந்தையை கட்டுப்பாட்டில் வைக்க உற்பத்தியைக் குறைக்க முயற்சித்ததால் அந்த விலைகள் அதிலிருந்து படிப்படியாக உயர்ந்துள்ளன.

எண்ணெய் உற்பத்தியில் முக்கிய நாடான சவூதி அரேபியா, ஜூலை மாதம் ஒரு நாளுக்கு பத்து இலட்சம் பீப்பாய்கள் வரை உற்பத்தி குறைக்கப்படும் என்று கூறியுள்ளது.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் அமைப்பான ஒபெக் + (Opec+) இன் மற்ற உறுப்பினர்களும் எண்ணெய் விலைகளை உயர்த்தும் முயற்சியில் உற்பத்தியைத் தொடர்ந்து குறைப்பதற்கு ஒப்புக்கொண்டனர்.

ஒபெக்+ உலகின் மசகு எண்ணெய் உற்பத்தியில் 40% பங்கு வகிக்கிறது என்பதுடன் அந்த அமைப்பின் முடிவுகள் எண்ணெய் விலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

**நன்றி - பி.பி.சி**

## நக்கல் நமசிவாயம்

**சீன கப்பலுக்கு அனுமதி கொடுக்க மாட்டேன் என்று சொன்ன ஸ்ரீலங்கா இப்போ எப்படி பாருங்கோ அனுமதியை வழங்கியது? எலும்பில்லாத நாக்கு எதைவேண்டுமானாலும் பேசும் என்று சும்மாவா சொன்னார்கள்?**



## இன்றைய நாளில்...

**1785 – ரிச்சார்ட் ஜோன்சன் என்பவர் தமிழ்நாட்டின் முதல் செய்திப்பத்திரிகையான மதராஸ் குரியர் என்ற ஆங்கில வார இதழை வெளியிட்டார்.**

**1798 – இலங்கை பிரித்தானியாவின் அரச குடியேற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. பிரெடெரிக் நோர்த் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.**

**1986 – மன்னார் அடம்பனில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் முதன்முதலாக சிங்கள இராணுவத்தினர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இத்தாக்குதலில் புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப். கேர்ணல் விக்டர் கொல்லப்பட்டார்.**

**2001 – அமைதிக்கான நோபல் பரிசு ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.**

# சுற்றுச்சூழல் தொடர்பான முடிவுகள் அறிவியல்பூர்வமாக எடுக்கப்பட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



சுற்றுச்சூழல் தொடர்பான முடிவுகள் அறிவியல் பூர்வமாக எடுக்கப்பட வேண்டும் என்றும் அண்மைக்காலத்திலிருந்து சுற்றுச்சூழலில் ஆர்வம் அதிகரித்திருப்பது சாதகமானது என்றும் இதன் காரணமாக தகவல் தரவுகளைத் தேடும் குழுக்கள் அதிகரித்துவருவது நல்ல விடயம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

பசுமைப் பொருளாதாரம், கொள்கைகள் பற்றி பேசினாலும், நடைமுறையில் செயற்படுத்தப் படாவிட்டால் அவை பயனற்றவை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

10 ஆண்டுகளுக்கும் மேலாக இத்துறையில் ஒரு குழுவினர் தன்னார்வலர்களாக பணியாற்றி வருவதனால் அர்களது சேவை ஸ்திரமாக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தலைமையிலான சுற்றாடல் தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவில், காட்டு யானைப் பிரச்சினை, வனஜீவராசிகள், சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான கலந்துரையாடலில் நேற்று முன்தினம் (10) கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்..

திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளைச் சுற்றுலாப்பயணிகளுக்கு திறந்துவைத்து அதன் மூலம் வருமானம் ஈட்ட முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வனஜீவராசிகள் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு வனவிலங்குகள் அதிகம் உள்ள வலயங்களில் பணிக்கு அமர்த்தப்பட்ட பழைய அனுபவம் உள்ளவர்கள் மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அரசியல் தலையீடுகளற்ற முறையான திட்டத்தை செயற்படுத்தலாம். பசுமைக் குடிமக்களை உருவாக்கும் நோக்கத்துடன், பசுமைக் கடன் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு, வனஜீவராசிகளைப் பாதுகாக்க மக்களையும் பயன்படுத்தலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

### பலஸ்தீன் – இஸ்ரேல் மோதல்;

# பொதுமக்களை பாதுகாப்பதில் அக்கறைகொள்ள வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

எந்தத் தரப்பும் பொதுமக்களைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டவேண்டும். இதே வேளை, பலஸ்தீன மக்களின் உரிமைகள் வழங்கப்படுவதோடு நிரந்தர சமாதானமும் அங்கு நிலவ வேண்டும்.

பேரழிவுகளையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தி வருகின்ற பலஸ்தீன் - இஸ்ரேல் மோதல் தொடர்பாக கரிசனையை வெளிப்படுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உரிமையும் சமாதானமும் பலஸ்தீனத்தில் நிலவ வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், பலஸ்தீன் - இஸ்ரேல் விவகாரத்தின் போக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் என்ற யதார்த்தை 1978ஆம் ஆண்டு அங்கு பயிற்சிக்கு சென்றபோதே தன்னால் உணரக்கூடியதாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று நடைபெற்ற நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

பலஸ்தீன மக்களின் உணர்வுகளையும் ஆழ்மன விருப்பங்களையும் நான் நேரில் கண்டிருக்கிறேன். அங்கு நான் ஆயுதப்பயிற்சி எடுத்தவேளை அவர்களது போராட்டத்தில் கூட பங்கெடுத்திருக்கிறேன். எமது மண்ணிலும் நானிருந்த எமது அன்றைய ஈ.பி. ஆர். எல். எவ். அமைப்பே கண்காட்சிகளை நடத்தி பலஸ்தீன விடுதலைக்கு பகிரங்க ஆதரவைத் தெரிவித்திருந்தது.



# அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜெனீவா பயணம்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று ஜெனீவா பயணமானார்.

உலக நாடுகளிலுள்ள தொழிற்சங்கங்கள் பங்கேற்கும் சர்வதேச தொழிற்சங்க மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அமைச்சர் ஜெனீவா சென்றுள்ளார். ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவையே இக்கூட்டம் நடைபெறும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்கவும் அமைச்சருடன் சென்றுள்ளனர்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிப்பாளரையும் இவ்விஜயத்தின்போது சந்தித்து அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார். அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. மலையகம் - 200 நிகழ்வு தொடர்பாகவும் சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘வல்லமை தாராயோ’ நூல் அறிமுக விழா




மாத்தளை பெ.வடிவேலனின் ‘வல்லமை தாராயோ’ சிறுகதைத்தொகுதி நூல் அறிமுகவிழா கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (15) மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுக் குழுவும், கொழும்பு கலை, இலக்கிய வட்டமும் இணைந்து விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பி.பி.தேவராஜ் (முன்னாள் இராஜாங்க அமைச்சர்), கே.சி.லோகேஸ்வரன் (முன்னாள் ஆளுநர் வடமேல் மாகாணம்), பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங் (உரிமையாளர் பூபாலசிங்கம் புத்தகசாலை). ஆர்.சிவராஜா (பிரதம ஆசிரியர் தமிழன்), தே.செந்தில்வேலவர் (பிரதம ஆசிரியர் தினகரன்), எஸ்.ஸ்ரீகஜன் (பிரதம ஆசிரியர் வீரகேசரி) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது நூலின் முதற் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்வர். அணிந்துரையை பேராசான் மு.நித்தியானந்தன் நிகழ்த்துவார்.

# பெண்பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவது திருமணத்துக்கான சீதனம் வழங்குவதாகும்

### இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார்





இகபால் அலி

பெண்பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுவது அவர்களுடைய திருமணத்துக்காக சீதனம் வழங்குவது போன்றதொரு விடயமாகும். ஒவ்வொரு பெண்களும் கட்டாயம் கல்வி கற்று உயர்ந்த இலக்கை அடையவேண்டும் - என கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

அந்தவகையில் கண்டி மாவட்டத்தில் பெண்களுக்கான உயர்ந்த கல்விச் சேவையை வழங்குவதில் கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி முன்னிலையில் திகழ்கின்றது என்றார்.

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அதிபர் ரிஸ்னா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தக்குமாரும் கௌரவ அதிதியாக பாகிஸ்தான் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்காரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் மற்றும் பாகிஸ்தான் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார் ஆகிய இருவரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் கபே அமைப்பின் பிரதிநிதிகள் சந்திப்பு



முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் கபே அமைப்பின் பிரதிநிதிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கட்கிழமை (09) கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள கபே தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது தொடர்ச்சியாக தேர்தல்கள் பிற்போடப்படுவதன் பாதகங்கள், அரசியலில் பெண்களின் வகிபாகங்கள், பெண் அரசியல்வாதிகள் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் மற்றும் சவால்களை எதிர்கொண்டு அரசியலில் பெண்கள் நிலைத்திருக்க செய்வதன் அவசியம் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலின்போது கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் சார்பாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன், நிர்வாகப் பணிப்பாளர் சுரங்கி ஆரியவங்ச, சட்டத்துறை பணிப்பாளர் ஹரேந்திர பானகல ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நெல்லியடியில் கைக்குண்டுடன் ஒருவர் கைது

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைக்குண்டு ஒன்றுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி துன்னாலை பகுதியில் நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் குறித்த நபருக்கு தொடர்பிருப்பதாகவும், வவுனியாவைச் சேர்ந்த நபர் நீண்டகாலமாக துன்னாலை பகுதியில் வசித் வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற இருவர் கைது



புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து முதிரை மரக்குற்றிகளை ஏற்றிவந்த கெப் ரக வாகனத்துடன், தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாறு பகுதியில் சாரதி உதவியாளர் என இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைவாக நேற்று இந்தக்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நெத்தலியாறு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ரிப்பர் வாகனமொன்றையும் பொலிஸார் கைப்பற்றினர். அத்துடன், சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கியக்களம் - 397

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கியக்களம் நாளை வெள்ளிக்கிழமை “நூல்களுடன் பயணிப்போம்” என்னும் தலைப்பில் நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் ச.இந்திரகுமார் தலைமையில் நாளை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் “நூல்களுடன் பயணிப்போம்” என்னும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலகர் சு.சித்தார்த்தினி உரை நிகழ்த்தவுள்ளார்.

# அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் உயர் குழுவின் விசேட கூட்டம்



ஏ.எஸ்.எம்.ஜாவித்

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் 50ஆவது மாநாட்டை நடத்துவது தொடர்பான உயர் குழுவின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் (10) நடைபெற்றது.

இதன்போது அழைப்பின்பேரில் சிங்கப்பூரின் புதிய நிலா ஆசிரியரும் உதவும்கரங்கள் நிறுவனத் தலைவரும், சமூக நீதி செயற்பாட்டாளருமான முஹமட் ஜஹாங்கிர் கலந்துகொண்டு அமைப்பின் செயற்பாடுகளை பாராட்டியதோடு இந்த நாட்டில் சகல இன மக்களுடனும் ஒன்றிணைந்து செல்லும்போது நல்ல பலன்களை அடைந்துகொள்வதுடன் நம்பிக்கையையும் கட்டியழுப்பலாம் என்று பல அவசியமான கருத்துகளை பகிர்ந்துகொண்டார்.

சம்மேளனத்தின் தலைவர் லுக்மான் ஸஹாப்தீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சம்மேளனத்தின் செயலாளர் அஹமட் முனவ்வர், சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்களான என்.எம்.அமீன், சட்டத்தரணி ரஷீட் எம்.இம்தியாஸ் உள்ளிட்ட உயர்பீட உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சம்மேளனத்தின் மாதாந்த சஞ்சிகையும் ஜஹாங்கிருக்கு கையளிக்கப்பட்டது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (11.10.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.7183 | 213.3003 |
| கனேடியன் டொலர் | 232.5295 | 243.5596 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.8393 | 45.7215 |
| யூரோ | 335.8812 | 350.8476 |
| ஜப்பான் யென் | 2.1309 | 2.2237 |
| சிங்கப்பூர் டொலர் | 231.9917 | 242.7779 |
| ஸ்ரேலிங் பவுன் | 390.2107 | 406.0001 |
| சுவிஸ் பிரான்ங் | 348.8745 | 366.7711 |
| ஐ.அ. டொலர் | 318.0267 | 328.7869 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 859.8200 |
| குவைட் | குவைட் தினார் | 1,047.5501 |
| ஓமான் | ஓமான் றியால் | 841.0603 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.8119 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.3304 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.1567 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய் 2023.10.10
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5263 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,289,232.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 5 3 3 6 5 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3505 — சீட்டிழுப்பு திகதி 10.10.2023 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,489,588.40
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 11 35 50 77 — விசேட எழுத்து P — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 57326

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1611 2023.10.10 — 19180 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 410,082,776.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 05 — வெற்றி இலக்கங்கள் 07 17 62 63
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஹதி Lucky 7 லக்ஸ் — திகதி 10.10.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0089
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 1 1 5 4 2 9 — L7 இலக்கம் 3 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,530,404.40

ராசி சுப பலன் — திகதி 10.10.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 572 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,218,195.20
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 03 26 33 59 — விசேட இலக்கினம் தனுசு

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1293 10.10.2023 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,672,215.20
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 24 25 63 65 — விசேட எழுத்து X — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 32751

# மன்னார் பொது வைத்தியசாலையில் நெஞ்சறை சத்திர சிகிச்சை முன்னெடுப்பு

## 03 மணிநேர முயற்சியில் இளைஞர் ஒருவரின் உயிர் காப்பாற்றப்பட்டது

மன்னார் நகர் நிருபர்

நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணத்துவ வசதிகொண்ட பெரிய வைத்தியசாலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படும் நெஞ்சறை சத்திர சிகிச்சை, அந்த வசதிகள் இல்லாத மன்னார் வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு இளைஞர் ஒருவரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

நெஞ்சிலே ஏற்பட்ட பாரிய கத்திக் குத்தினால் நெஞ்சுக்குழியினுள் ஏற்பட்ட தொடர் குருதிப்பெருக்கை நிறுத்த நெஞ்சுக்கூட்டை திறந்து சத்திர சிகிச்சை மேற்கொண்டு மன்னார் பொது வைத்தியசாலையில் இளைஞர் ஒருவரின் உயிர் காப்பாற்றப்பட்டது.

கடந்த 5ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு 35 வயது இளைஞர் ஒருவர் வலது பக்க நெஞ்சுப் பகுதியில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் உடனடியாக அவர் சத்திர சிகிச்சை கூடத்துக்கு எடுக்கப்பட்டு வலது பக்க நெஞ்சறையினுள் IC tube எனப்படும் குழாய் செலுத்தப்பட்டு அவருடைய நெஞ்சுக் குழியினுள் வேகமான தொடர் குருதிப்பெருக்கு இருப்பது அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில், அவசரமாக செய்யவேண்டிய CT scan வசதி மற்றும் நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணத்துவ வசதி என்பன மன்னார் வைத்தியசாலையில் இல்லாத காரணத்தினால் குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் அனுப்புவதாக முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால், அவரை வெலிசறை நெஞ்சு வைத்தியசாலைக்கு அனுப்புமாறு யாழ்ப்பாண வைத்தியசாலையிலிருந்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டு ஏறக்குறைய 03 லீற்றர் குருதியை இழந்துவிட்ட நிலையில் குருதிப்பெருக்கு மிகவும் வேகமாக இருந்த காரணத்தினால் அவரை அம்பியூலன்ஸில் பிறிதொரு வைத்தியசாலைக்கு அனுப்புவது அவரது உயிருக்கு மிகவும் ஆபத்தானது என முடிவு செய்யப்பட்டு மன்னார் வைத்தியசாலையிலேயே நெஞ்சறை சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.


பொது சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர்



எம். மதுரகீதன் தலைமையிலான சத்திர சிகிச்சை அணியும் உணர்விழப்பியல் மற்றும் அதிதீவிர சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஜூட் பிரசாந்தன் தலைமையிலான உணர்விழப்பு அணியும் இணைந்து நெஞ்சுக்கூட்டை திறந்து குருதிப் பெருக்கை கட்டுப்படுத்தும் சத்திர சிகிச்சை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

வைத்திய நிபுணர்களால் சரியான தருணத்தில் எடுக்கப்பட்ட முடிவாலும் ஏறக்குறைய மூன்று மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் திறமை வாய்ந்த அவசர நிலை பராமரிப்பாலும் ஒரு இளைஞரின் பெறுமதிமிக்க உயிர் காப்பாற்றப்பட்டது.

இந்த சத்திர சிகிச்சையின்போது மன்னார் வைத்தியசாலை குருதி வங்கியின் பங்கு மிகவும் அளப்பரியதாகும். மிகப் பெரிய அளவிலான குருதி மாற்றீடு செய்யப்பட்டே இந்த



இளைஞரின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது.

CT scan மற்றும் நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணத்துவ வசதிகொண்ட பெரிய வைத்தியசாலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படும் இந்த சத்திர சிகிச்சை அந்த வசதிகள் இல்லாத மன்னார் வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது மிகவும் சிறப்பான விடயமாகக் கருதப்படுகிறது.

# தமிழீழப் போர் வரலாற்றின் முதல் பெண் மாவீரரின் நினைவேந்தல்





மன்னார் நகர் நிருபர்

இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான போரில் முதல் பெண் மாவீரரும் இந்திய இராணுவத்துக்கு எதிரான சமரில் முதலில் உயிர்த்தியாகம் செய்த இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் 36ஆவது நினைவு நாள் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 06 மணியளவில் அடம்பனில் உள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்றது.

1967ஆம் ஆண்டு மன்னாரில் பிறந்த மாலதி, வடக்கு கிழக்கு பகுதிகளில் இலங்கை இராணுவத்தாலும் இந்திய இராணுவத்தாலும் தமிழ்ப் பெண்கள் படும் அவலத்தையும் அவர்கள் எதிர்கொண்ட துயரத்தையும் எண்ணி ஆயுதம் ஏந்தினாள்.

தனது 20ஆவது வயதில் 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் இந்திய இராணுவத்துக்கு எதிராக இடம்பெற்ற சண்டையில் நேருக்கு நேர் மோதி வீரமரணமடைந்தாள். தமிழீழப் போர் வரலாற்றில் வீரமரணமடைந்த முதல் பெண்ணாக மாலதி நினைவுகூரப்படுகின்றாள்.

அவளின் உயிர்த்தியாகத்தையும் அவளின் துணிச்சலையும் கௌரவப்படுத்தும் முகமாக பின்னாளில் அவளின் வீரத்துக்கும் துணிச்சலுக்கும் மதிப்பளித்து மாலதியின் பெயரில் படையணிகளும் உருவாக்கப்பட்டன.

பெண்களாலும் ஈழ விடியலுக்காக போராட முடியும் என்பதை நிரூபித்து உயிர் திறந்த மாலதியின் நினைவு பலராலும் மறக்கப்பட்டாலும் வருடா வருடம் அடம்பன் பகுதியில் அவளின் நினைவாக நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த நினைவஞ்சலி நிகழ்வில் மாலதியின் பெற்றோர்கள், உறவினர்கள் இணைந்து மாலதியின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# திருமணத்துக்கு தயார்படுத்துவதற்கான மூன்று நாள் உளவளத்துணை பயிலமர்வு



பு.கஜிந்தன்

IMHO Canada (INGO) இன் நிதியுதவியுடன் கிளிநொச்சி உளநல சங்கத்தின் ஏற்பாட்டில் (KMHS, NGO) யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக திருமணமாகவுள்ள தம்பதிகளுக்கு திருமணத்துக்கு முன்னரான திருமணத்துக்கு தயார்படுத்துவதற்கான மூன்று நாள் உளவளத்துணை பயிற்சி பயிலமர்வு நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் அரச துறையில் பணியாற்றும் துறைசார் நிபுணர் குழு வளவாளர்களினால் இப்பயிலமர்வு அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் புதிதாக திருமணமாகவுள்ள 30 தம்பதிகள் கலந்துகொண்டு இப்பயிற்சியைப் பெற்றுக்கொண்டனர்.

எதிர்காலத்தில் பால்நிலைசார் வன்முறையற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனும் ஆரோக்கியமான பால்நிலை புரிதலுடன் கூடிய திருமண வாழ்வை மேம்படுத்தும் நோக்குடனும் இவ் உளவளத்துணை பயிற்சி பயிலமர்வு KMHS (NGO)இனால் ஒழுங்கமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்னை மரத்திலிருந்து விழுந்து 04 பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

பு.கஜிந்தன்

தென்னை மரத்திலிருந்து விழுந்து, நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கடந்த திங்கட்கிழமை (09) உயிரிழந்துள்ளார்.

புத்தூர் கிழக்கு, புத்தூர் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை கணேசலிங்கம் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் கடந்த 6ஆம் திகதி, தென்னை மரத்தில் சீவல் தொழில் செய்வதற்காக ஏறிய நிலையில் வழுக்கி கீழே விழுந்துள்ளார்.

இந்நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கலஹாவில் ஒருவர் கைது




கலஹா செய்தியாளர்

வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்டு இரகசியமாக விற்பனை செய்து வந்ததாகக் கூறப்படும் 02இலட்சத்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளை கலஹா பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கலஹா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று (11) அதிகாலை தெல்தோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றை பொலிஸார் சுற்றி வளைத்தனர்.

இதன்போது குறித்த சிகரெட்டுகள் அடங்கிய பெட்டியை சந்தேக நபர் தலையில் சுமந்துகொண்டு பின் வழியாக தப்பியோட முயன்ற சந்தர்ப்பத்தில் பொலிஸார் மடக்கி பிடித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலிருந்து மேற்படி சிகரெட்டுகளை கலஹா தெல்தோட்டை மற்றும் நகரை அண்டியுள்ள தோட்டப்பகுதி வியாபார நிலையங்களுக்கும் விற்பனை செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# லுணுகலை ஸ்ரீராமகிருஷ்ணாவின் அதிபர் நியமன இழுபறிக்கு தீர்வு

## வடிவேல் சுரேஷ் எம்.பி. நடவடிக்கை



பதுளை, லுணுகலை ஸ்ரீராமகிருஷ்ணா தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் நியமனம் சம்பந்தமாக ஏற்பட்டு வந்த இழுபறி நிலைமைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

லுணுகலை ஸ்ரீராமகிருஷ்ணா தமிழ் மகா வித்தியாலயத்துக்கு நியமிக்கப்பட்ட அதிபர் தகுதியற்றவர் என்று பலராலும் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷுக்கும் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலுக்கும் இடையில் நேற்று கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

ஊவா மாகாணத்திலே ஓர் நேர்முகப் பரீட்சை நடத்தி தகுதியான அதிபரை பாடசாலைக்கு நியமிப்பதற்கு கலந்துரையாடலின்போது இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவித்துள்ளார். அதுவரை பாடசாலையின் பிரதி அதிபரை பதில் அதிபராக கடமையாற்றும்படி தீர்மானிக்கப்பட்டது.

# நுவரெலியா சென்.கூம்ஸ் - கிரேட் வெஸ்டர்ன் தோட்டங்களில் தாய் சேய் சுகாதார நிலையங்கள்





செ.திவாகரன், ஆர்.ரமேஸ், டீ. சந்ரு, பீ.கேதீஸ்

நுவரெலியா சென்.கூம்ஸ் (St Clair) தோட்டம் மற்றும் கிரேட் வெஸ்டர்ன் தோட்டத்திலுள்ள தாய் சேய் சுகாதார நிலையங்கள் (UN-Habitat, KOICA) கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் (10) செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இலங்கையின் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் "கொவிட் -19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் சமூகப் பொருளாதார பின்னடைவை வலுப்படுத்துதல்" என்ற திட்டத்தின் கீழ் இரண்டு தாய் சேய் சுகாதார நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டு கையளிக்கப்பட்டன.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் திட்டமிடல் செயலாளர் எஸ்.எல்.அன்வர் கான், நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நிஷங்க விஜேயவர்தன, சுகாதார சேவைகள் திட்ட செயலாளர் வைத்தியர் கமில் பிரபாஷ்வர, நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி (MOH )வைத்தியர் சுதர்சன், லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜனாத் அபேரட்ன, பொது சுகாதார அதிகாரிகள், பொது சுகாதார மருத்துவச்சிகள் மற்றும் தோட்ட அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



ராமு தனராஜா

**பசறையிலிருந்து எல்டப் நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 50அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.**

**இவ்விபத்து பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுல்சீமை வீதியில் கிகிரிவத்தை மாரியம்மன் ஆலயத்துக்கு முன்பாக நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. எனினும், எவருக்கும் காயங்கள் ஏற்படாத போதிலும் முச்சக்கர வண்டி பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. வீதியின் குறுக்கே நாயொன்று பாய்ந்ததாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.**

# பதுளை பஸ்தரிப்பிடத்தில் எமன் வடிவில் மின்மாணி

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை



ராமு தனராஜா

பதுளை பிரதான பஸ்தரிப்பிடத்திலுள்ள கட்டடமொன்றில் பொருத்தப்பட்டுள்ள மின்மானி பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

''மூன்று - நான்கு ஆண்டுகளாக சீர்திருத்தப்படாது குறித்த மின்மானி பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. இதை சரி செய்ய உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை'' என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

இந்த மின்மானியின் பாதுகாப்புக்காக பொருத்தப்பட்டுள்ள பெட்டிகள் உடைந்துள்ளதுடன், மின் இணைப்புகள் வழங்குவதற்காக பொருத்தப்பட்டுள்ள பிரதான மின் கம்பிகள் சேதமடைந்துள்ளன.

மேலும் இந்த பாதுகாப்பற்ற மின்மானி பொருத்தப்பட்டுள்ள பகுதிக்கு அருகில் இலங்கை வங்கியின் ஏரிஎம் இயந்திரமும் காணப்படுகிறது. பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் மற்றும் தனியார் பஸ்களும் இவ்விடத்திலேயே தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்கின்றன.

பல சந்தர்ப்பங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும்போது பாதுகாப்பற்ற நிலையில், மின்கசிவு ஏற்படின் உயிர் ஆபத்துகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மின்மானியை திருத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது

கண்டி நிருபர்

பொகவந்தலாவை பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றில் வைத்து நேற்றுமுன்தினம் (10) ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைதாகியுள்ளனர்.

பொகவந்தலாவையில் பொலிஸார் அமைத்துள்ள சோதனைச் சாவடியொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது பொதி செய்யப்பட்ட 05 மில்லிகிராம் போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருவரும் 22 மற்றும் 25 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளதுடன், அவர்கள் கொழும்பிலிருந்து போதைப்பொருளை எடுத்து வந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. சந்தேக நபர்கள் இருவரையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# முகாம் மீது மியன்மார் இராணுவம் குண்டுவீச்சு: 13 குழந்தைகள் உட்பட 19 பேர் பரிதாபப் பலி!



மியன்மாரில் பொதுமக்கள் முகாம் மீது அந்நாட்டு இராணுவம் குண்டு வீசி தாக்கியதில் 13 குழந்தைகள் உட்பட 19 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மியன்மாரில் கடந்த 2021ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடந்த தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயக கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. ஆனால், தேர்தலில் முறைகேடு நடந்ததாகக் கூறிய இராணுவம் ஆட்சிப்பொறுப்பைக் கைப்பற்றியது.

இராணுவ ஆட்சியை எதிர்த்த பொதுமக்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டனர்.

இராணுவத்துக்கு எதிராக ஜனநாயக மக்கள் படை என்ற ஆயுதமேந்திய குழுவும் கச்சின் பகுதி சிறுபான்மை இனமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இராணுவத்துக்குப் பயந்து வீடுகளை விட்டு, இடம்பெயர்ந்த பொதுமக்கள் மியன்மாரின் லைசா நகருக்கு அருகில் முங்லை ஹையெட் பகுதியிலுள்ள கூடாரத்தில் தங்கியிருந்தனர். கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் திடீரென அங்கு வந்த இராணுவ ஜெட் விமானம் கூடாரத்தின் மீது குண்டு வீசியது. அதில் கூடாரத்தில் தூங்கிக்கொண்டிருந்த 13 குழந்தைகள் உட்பட 19 பேர் பரிதாபமாகப் பலியாயினர்.

## தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட செங் லீ 3 ஆண்டுகளுக்கு பின் விடுதலை



சீனாவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த அவுஸ்திரேலிய பத்திரிகையாளர் செங் லீ 3 ஆண்டுகளுக்குப் பிறகு நாடு திரும்பினார்

முன்னாள் சீன அரச தொலைக்காட்சி தொகுப்பாளரான செங் லீ, அரச இரகசியங்களை வெளிநாடுகளுக்குப் பரிமாற்றிய குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டார். இவர் சீனாவில் மூன்று வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் நேற்று (11) அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பியுள்ளதாக பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

## 104 வயதில் ஸ்கை டைவிங்; கின்னஸ் சாதனை படைத்த மூதாட்டி மரணம்

அமெரிக்காவில் 104 வயது மூதாட்டி டோரத்தி ஹர்ஃப்னர் என்பவர் கடந்த முதலாம் திகதி ஸ்கை டைவிங் செய்து உலக சாதனை படைத்தார். இல்லினாய்ஸின் ஒட்டாவாவிலுள்ள ஸ்கை டைவ் சிக்காகோவில் ஒரு விமானத்திலிருந்து 13,500 அடி உயரத்திலிருந்து டோரத்தி குதித்து சாதனை படைத்தார். இதனையடுத்து, அவர் உலகின் மிகவும் மூத்த ஸ்கை டைவர் என்று கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தார்.

டோரத்தி தூங்கிக்கொண்டிருந்தபோது இறந்துள்ளதாகவும். அவரது மரணத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

# இஸ்ரேல் - ஹமாஸ் மோதல்: மனித உரிமைகளுக்கு என்ன ஆனது?

## துருக்கி ஜனாதிபதி எர்டோகன் கேள்வி



இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் மனித உரிமைகளுக்கு என்ன ஆனது என்று துருக்கி ஜனாதிபதி எர்டோகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலுக்குள் புகுந்து ரொக்கெட்டுகள், வெடிகுண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இதற்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

பலி எண்ணிக்கை 2 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் தொடுத்த போர் உலக நாடுகளையே அதிர்ச்சியடையச் செய்துள்ளது. ஹமாஸ் அமைப்பினருக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், இஸ்ரேல்-ஹமாஸ் போர் குறித்து துருக்கி ஜனாதிபதி எர்டோகன் தெரிவித்ததாவது,

இஸ்ரேலுக்கு அமெரிக்கா விமானந்தாங்கி போர்க்கப்பலை அனுப்பியிருக்கிறது.

அமெரிக்காவுக்கு இஸ்ரேலில் என்ன வேலை. காசாவிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குண்டுமழை வீசுவதற்கே அமெரிக்கா இந்த வேலையில் இறங்கியிருக்கிறது. காசாவுக்குள் தண்ணீர் செல்லும் பாதைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருக்கிறது. அங்கிருக்கும் வைத்தியசாலைகள் செயற்படும் நிலையில் இருக்கின்றனவா எனத் தெரியவில்லை. துரதிர்ஷ்டவசமாக வழிபாட்டுத்தலங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள் என கருணையின்றி குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கிறது.

உலகம் இதை அமைதியாக வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. யாரும் எதுவும் சொல்வதில்லை. மனித உரிமைகளுக்கு என்ன ஆனது? என துருக்கிய ஜனாதிபதி கேள்வியெழுப்பியுள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்



ஆப்கானிஸ்தானில் நேற்றுக் காலை மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

6.1 ரிச்டர் அளவு பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் (என்சிஎஸ்) தெரிவித்துள்ளது.

தேசிய நில அதிர்வு மைய தகவலின்படி, ஆப்கானிஸ்தானில் நேற்று புதன்கிழமை (11) காலை 6.11 மணிக்கு பூமிக்கு அடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் 6.1 ரிச்டர் அளவில் அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

ஏற்கனவே நிலநடுக்கத்தால் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ள நிலையில், தற்போது மீண்டும் ஒரு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டமையானது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலக செய்திகள்

# அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களுடன் விமானம் தெற்கு இஸ்ரேலில் தரையிறக்கம்

ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் மீது கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தினர். இதற்கு இஸ்ரேல் கடுமையான வகையில் பதிலடி தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேல் நடவடிக்கைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.


நேரடியாக போரில் இறங்கவில்லை என்றாலும், ஆயுதங்கள் வழங்குவதற்குத் தயாராக இருந்தது. ஈரான், லெபனானை மிரட்டும் வகையில் போர்க்கப்பலை மத்தியதரைக்கடல் பகுதிக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களுடன் முதல் விமானம் தெற்கு இஸ்ரேலில் தரையிறங்கியுள்ளது. இந்தத் தகவலை இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தப் போர் நேரத்தில் இருநாட்டு இராணுவ ஒத்துழைப்பு எங்கள் பகுதியின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு முக்கியமானது என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு நான்கு முறை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாஹூ, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உடன் தொலைபேசியில் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாதனைக்கு வயதில்லையென உணர்த்திய மூதாட்டி காலமானார்



எந்த சாதனைக்கும் வயது ஒரு பொருட்டே அல்ல. வயதும் முதுமையும் உடலுக்குத்தானே தவிர, அறிவுக்கும் உழைப்புக்கும் இல்லை என்பதை உணர்த்திய மூதாட்டி கார்த்தியாயினி (101 வயது) மூப்பு காரணமாக புதன்கிழமை காலமானார்.

இவர் எழுத்தறிவு பரீட்சையில் கலந்துகொண்டார். 96 வயது காத்தியாயினி அம்மாள் 100இற்கு 98 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்தார். இவர், எழுத்துப் பரீட்சையில் 40இற்கு 38 புள்ளிகளும், கணிதம் மற்றும் வாசித்தல் பரீட்சையில் முழு புள்ளிகளையும் பெற்றார். இதன் மூலம் கல்வி கற்பதற்கு வயது ஒரு தடையில்லை என்பதை நிரூபித்தார்.

இந்நிலையில், வயது மூப்பு காரணமாக கார்த்தியாயினி (101) நேற்று காலமானார்.

இவரது மறைவுக்கு சமூக ஆர்வலர்கள், அரசியல் பிரமுகர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# நாடு திரும்புகிறார் நவாஸ் ஷெரீப்

ஊழல் வழக்கு தொடர்பாக தண்டனை பெற்ற பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் லண்டனில் தஞ்சமடைந்தார்.

இந்நிலையில், பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தற்போது தேர்தலை முன்னிட்டு அவர் எதிர்வரும் 21ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

# தன்சானியாவில் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள்!

## 16 மணி நேர உயிர்ப் போராட்டத்துடன் சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக முடித்த சவூதி அரேபியா









தன்சானியாவில் நெஞ்சுப் பகுதிக்கு கீழுள்ள பகுதிகளில் உறுப்புகளால் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் சவூதி அரேபியாவில் 16 மணி நேர சத்திர சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பிரிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைப் பாக்கியம் என்பது இறைவனால் பெற்றோருக்கு வழங்கப்படும் மிகப்பெரும் அருளாகும். ஒரு தாயின் கருவில் ஒரு குழந்தை, இரண்டு குழந்தைகள், மூன்று குழந்தைகள் என பல குழந்தைகள் இறைவனால் அருளப்பட்டாலும் பெரும்பான்மையாக ஒற்றை அல்லது இரட்டைக் குழந்தைகள் பிறப்பது அதிகம் எனலாம்.

அவ்வப்போது இரட்டையர்கள் பிறப்பது சாதாரணம் என்றாலும், இரட்டையர்கள் உறுப்புகளால் ஒட்டிப் பிறப்பதென்பது அரிதான விடயம் என மருத்துவ உலகம் சான்றுபகர்கிறது.

ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் பெரிய வயது வரை பிரிக்கப்படாமல் வாழ்ந்தவர்களும் சிறுவயதிலேயே தனித்தனியாக பிரிக்கப்பட்டு வேறு வேறாக வாழ்பவர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தன்சானியாவில் அண்மையில் நெஞ்சுப் பகுதிக்கு கீழுள்ள பகுதிகளில் உறுப்புகளால் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள்தான் ஹசன் மற்றும் ஹுஸைன் எனும் இரண்டு ஆண் குழந்தைகள்.

சவூதி அரேபியாவின் தலைநகரான ரியாதுக்குட்பட்ட அப்துல் அஸீஸ் நகரிலுள்ள மன்னர் அப்துல்லாஹ் குழந்தை பராமரிப்பு சிறப்பு மருத்துவமனையில் இரட்டையர்கள் ஹஸன் மற்றும் ஹுஸைனை வேறு வேறாகப் பிரிப்பதற்கான சத்திர சிகிச்சை கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இச்சத்திர சிகிச்சை நடவடிக்கையை முன்னெடுப்பதற்காக வைத்திய ஆலோசகர்கள் மற்றும் வைத்திய நிபுணர்கள் என 35 பேர் கொண்ட குழுவொன்று வைத்தியர் அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸீஸ் அர்ரபீஆ தலைமையில் நியமிக்கப்பட்டது.

இச்சத்திர சிகிச்சை 9 கட்டங்களில், 16 மணித்தியாலங்களாக முன்னெடுக்கப்பட்டதாக வைத்தியர் அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸீஸ் அர்ரபீஆ குறிப்பிட்டுள்ளார்.

இச்சத்திர சிகிச்சை சவூதி அரேபியாவின் மனிதாபிமான செயற்பாடுகள் மற்றும் நிவாரணம் வழங்கலுக்கான மன்னர் சல்மான் மையத்தின் ஊடாக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் விடயத்தில் இலவசமாக நடத்தப்படும் 59 ஆவது சத்திர சிகிச்சை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 33 ஆண்டுகளில் 24 நாடுகளில் இருந்து 133 ஒட்டிப்பிறந்த இரட்டையர்களை சவூதி அரேபியா அரசு பரிசீலித்து அதில் 58 ஒட்டிப் பிறந்த இரட்டையர்களை பிரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வெற்றியும் அடைந்துள்ளது. ஹஸன் மற்றும் ஹுஸைனுடைய இந்த சத்திர சிகிச்சையானது 59 ஆவது என சவூதி அரேபிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இறுதியாக இச்சத்திர சிகிச்சையின் முடிவில் இது அல்லாஹ்வின் உதவியோடு வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது என்பதை கூறி வைத்தியர் அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸீஸ் அர்ரபீஆ "ஹாதிமுல் ஹரமைன்" மன்னர் சல்மான் மற்றும் முடிக்குரிய இளவரசர் முஹம்மத் இப்னு சல்மான் ஆகியோருக்கு அவர்களின் சேவைகளை நினைவு கூரி அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்.

மேலும் இதில் முழுமையாக பங்காற்றிய ஆலோசகர்கள், வைத்திய நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் வைத்திய குழு தலைவர் அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸீஸ் அர்ரபீஆ , தனது நன்றியை தெரிவித்து, குழந்தைகளின் பெற்றோரையும் பாராட்டினார்.


மேலும் சவூதி அரேபியாவில் அமைந்துள்ள தன்சானியா தூதரகத்தின் தூதுவரும் தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற மனிதாபிமான செயற்பாடுகள், உதவிகள் மற்றும் நிவாரணங்கள் என அனைத்துச் சேவைகளையும் அடிக்கடி தனது சகோதர நாடுகளான அனைத்து நாடுகளுக்கும் வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளது சவூதி அரேபியா.

எமது நாடான இலங்கை நாட்டுக்கும் அடிக்கடி இவ்வாறான சேவைகள் சவூதி அரேபிய அரசாங்கத்தினால் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

காத்தான்குடி மற்றும் ஏனைய சில பிரதேசங்களில் அண்மையில் நடைபெற்ற கண் சத்திர சிகிச்சை முகாம் சவூதி அரேபியாவின் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதும் சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

**அஷ்ஷெய்க் ஏ.சீ. தஸ்தீக் ஹாமி,(மதனி)**
**அதிபர்,**
**அல் ஹாமியா அரபுக் கல்லூரி, கல்முனை.**










# யானை தாக்கி ஒரே நாளில் நான்கு இடங்களில் சேதம்





சம்மாந்துறை செய்தியாளர்

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 08 கிராம சேவையாளர் பிரிவில் புதன்கிழமை (11) அதிகாலை யானையொன்று 04 இடங்களைத் தாக்கி சேதப்படுத்தியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பிரதேசத்துக்குள் உள்நுழைந்த காட்டு யானை அங்குள்ள பயன்தரு வாழை, வீட்டுப்பயிர்களை சேதப்படுத்தியுள்ளதுடன், வீட்டுச்சுவர்களையும் உடைத்து களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள நெல் மூடைகளையும் சேதப்படுத்தியுள்ளது.

சம்மாந்துறை பிரதேசத்துக்குள் நாளாந்தம் காட்டு யானைகள் இரவுவேளைகளில் நுழைந்து சேதங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இதனால், மக்கள் அச்சமடைந்தவர்களாக உள்ளனர். அதனால், காட்டுயானைகளின் வருகையை கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பொதுமக்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.



GTZ நிறுவனத்தால் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட குறுந்திரைப்பட நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு சிறந்த செயற்பாட்டுக்கான நினைவுச்சின்னம் நிறுவன இணைப்பாளர் எம்.மாஹிரினால் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமது ஷாபீரிடம் வழங்கப்பட்டது. இதன்போது கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜௌபர், அபிவிருத்தி உத்தியோகத்தர் சாஹிரா இஸ்மாயில் மற்றும் மகளிர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எச்.எம்.பர்ஹானா ஆகியோரும் உடனிருந்தனர். **படம்:** திராய்க்கேணி செய்தியாளர்




''உள நலம் உலகளாவிய மனித உரிமையாகும்'' எனும் தொனிப்பொருளில் உலக உளநல தினம் திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயத்தில் புதன்கிழமை (11) நடைபெற்றது. அதிபர் மு.சண்டேஸ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு கருத்துகள் அடங்கிய பதாகைகள் மற்றும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பாடசாலையிலிருந்து நடைபவனியாகவும் சைக்கிள் மூலமும் அக்கரைப்பற்று மணிக்கூட்டு கோபுரத்தை அடைந்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். **படம்:** ஆலையடிவேம்பு செய்தியாளர்

# போலி வெளிநாட்டு முகவர் ஒருவர் கைது

## கனடாவுக்கு அனுப்புவதாக கூறி சோசடி

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் கனடாவுக்கு அனுப்புவதாக தெரிவித்து 59 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவையும் போலி விமானச்சீட்டையும் வழங்கி மோசடியில் ஈடுபட்ட போலி வெளிநாட்டு முகவர் ஒருவரை புதன்கிழமை (11) கைதுசெய்துள்ளதாக மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு. தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள ஒருவரிடம் கனடாவுக்கு அனுப்புவதாக களுவங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த போலி வெளிநாட்டு முகவர் ஒருவர் தெரிவித்து 59 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்டும் கனடாவுக்கான போலி விமானச் சீட்டை வழங்கியும் கனடாவுக்கு அனுப்பாது ஏமாற்றிவந்துள்ளார்.

இதனையடுத்து, வெளிநாட்டு போலி முகவருக்கு எதிராக மட்டு. மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து தலைமறைவாகியிருந்த போலி முகவரை விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் களுவங்கேணியில் கைதுசெய்தனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர் 40 வயதுடையவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.




திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமப்புறப் பகுதியிலுள்ள உப்பாறு வைஷ்ணவி வித்தியாலயத்துக்கு திருகோணமலை ரோட்டரி கழகத்தால் கற்றல் உபகரணங்கள் செவ்வாய்க்கிழமை (10) அன்பளிப்புச் செய்யப்பட்டன. கழகத் தலைவர் எஸ்.சௌந்தரராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கழக அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இத்திட்டத்துக்கு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த விக் மற்றும் கரேன் ஆகிய நலன்விரும்பிகள் அனுசரணை வழங்கினர்.

**படம்:** கிண்ணியா செய்தியாளர்

# சுயதொழில் ஊக்குவிப்புப் பயிற்சிநெறி



பாண்டிருப்பு செய்தியாளர்

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, கோட்டைக்கல்லாறு பொதுநூலகம் மற்றும் வாசகர் வட்டம் ஆகியன இணைந்து பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு பயிற்சிநெறியொன்றை புதன்கிழமை (11) ஏற்பாடு செய்திருந்தன.

நூலகப் பொறுப்பாளர் வினோதா அன்ரோ தலைமையில் பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபை செயலாளர் எஸ்.அறிவழகன் அதிதியாக கலந்துகொண்டார். வளவாளராக களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.தர்சன், நூலக உதவியாளர் தனஞ்சயன் உட்பட பயனாளிகள் கலந்துகொண்டனர்.

இங்கு சுயதொழில் ஊக்குவிப்புப் பயிற்சிநெறியாக சலவைத்தூள் தயாரிப்பு மற்றும் மெழுகுவர்த்தி தயாரிப்பு ஆகிய பயிற்சிநெறிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உள்ளூர் உற்பத்திப்பொருள் கண்காட்சி





மட்டக்களப்பு

காத்தான்குடி பிரதேச செயலக சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்திப்பொருட்களுக்கான பிரதேச மட்டத்திலான விற்பனைக் கண்காட்சி திங்கட்கிழமை (09) பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர் தலைமையில் பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றது.

இக்கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் பாதணிகள், இனிப்புப் பண்டங்கள், குழந்தைகளுக்கான கைவினைப் பொருட்கள், ஆடைகள், விதைக் கன்றுகள் போன்ற பல்வேறு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு, விற்பனைசெய்யப்பட்டன.

இதன்போது பிரதேச செயலகத்தின் சகல உத்தியோகத்தர்களும் பார்வையிட்டதுடன் சிறு கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களின் உற்பத்திகளைப் பாராட்டி, அவற்றைக் கொள்வனவுசெய்வதிலும் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட செயலக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கோறளைப்பற்று மத்தியில் இடம்பெற்ற முதியோர் தினம்

கல்குடா செய்தியாளர்

''ஆரோக்கியமிகு அகவையினை நோக்கி உலகளாவிய சிரேஷ்ட பிரஜைகளுக்கான மனித உரிமைகளை நடைமுறைகள் கடந்து நிறைவேற்றுதல்'' எனும் கருப்பொருளில் முதியோர் தின நிகழ்வு கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (10) மாலை நடைபெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் மற்றும் பிரதேச முதியோர் சம்மேளனம் என்பன இணைந்து பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த் கலந்துகொண்டார்.

விசேட அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ரீ.எம்.றிஸ்வி, பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.றமீஸா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.அலியார், நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.தாஹிர், சமுர்த்தி




தலைமையக முகாமையாளர் எஸ்.ஏ.எம்.பஷீர், சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.நஜீம், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.நிலுஜா, பிரதேச முதியோர் சம்மேளனத் தலைவர் பி.எம்.எம்.இஸ்மாயில் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது முதியோருக்கான அறிவுக் களஞ்சியம், பலூன் உடைத்தல், கலர் தெரிவு செய்தல், தொப்பி மாற்றுதல் போட்டிகள் வைக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், 90 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளும் சமூக சேவைகளில் ஈடுபட்ட சிரேஷ்ட பிரஜைகளும் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# மூதூரில் கௌரவிப்பு




மூதூர் செய்தியாளர்

மூதூர் வலயக் கல்வி அலுவலகப் பிரிவில் 2022-2023 காலப்பகுதியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்றது.

மூதூர் - சம்பூர் கலாசார மண்டபத்தில் மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் முனவ்வறா நளீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.ஜீ.திசாநாயக்க கலந்துகொண்டிருந்தார்.

மேலும், விசேட அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் மற்றும் மூதூர் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ். சுகாதாரக் குழுவினர் அக்கரைப்பற்றுக்கு விஜயம்



அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய மூன்று ஆதார வைத்தியசாலைகளின் கழிவு முகாமைத்துவத்தில் பணியாற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை குழுவினர் வியாழக்கிழமை (05) களவிஜயம் மேற்கொண்டிருந்தனர்.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ. ஆர்.றஜாப் மற்றும் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

வைத்தியசாலை கழிவு முகாமைத்துவம் மற்றும் ஏனைய பிரிவுகளையும் வருகைதந்தோர் நேரில் சென்று பார்வையிட்ட இக்களவிஜயத்தில் யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிமனையின் சுற்றாடல் உணவு பாதுகாப்பு வைத்திய அதிகாரி டாக்டர் என்.என்.கமலராஜன், தெல்லிப்பழை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எம். றெமன்ஸ், ஊர்காவற்றுறை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் திசானி சேரலதன், பருத்தித்துறை வைத்தியசாலை பொறுப்பு அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சார்பில் பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் மற்றும் தாதிய பரிபாலகர் பி.ரி.நௌபர், நிர்வாக உத்தியோகத்தர் கே.விஜயகுமார், வைத்தியசாலை குழு உறுப்பினர் கள், வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டதுடன், இங்கு களவிஜயம் மேற்கொண்டோருக்கு நினைவாக வைத்திய அத்தியட்சகர் ஞாபகச்சின்னம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# நுகர்வோர் உரிமை தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு



மீரா நகர் செய்தியாளர்

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையால் நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு புதன்கிழமை (11) இடம்பெற்றது.

கல்லூரியின் தொழில் வழிகாட்டல் ஆலோசகரும் நூலகருமான முபாறக் றுமைஸ் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், நுகர்வோரின் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின்போது கவனிக்கவேண்டிய முக்கியமான விடயங்களுடன் தற்போதைய சந்தையிலுள்ள பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகாரசபையின் சட்டத்திட்டங்கள் சம்பந்தமாகவும் விளக்கக்காட்சி ஊடாக தெளிவுபடுத்தப்பட்டது.

இச்செயலமர்வில் பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட்.எம்.ஸாஜீத், புலன் விசாரணை அதிகாரி ஏ.ஏ.ஏ.ஸர்பான், என்.எம்.றிப்கான் ஆகியோருடன் கல்லூரியின் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர்.

# நூராணியா மையவாடி சிரமதானம்




சாய்ந்தமருது செய்தியாளர்

கல்முனை மாநகர சபையின் சேவை விநியோக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கல்முனை நூராணியா மையவாடியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் வேலைத்திட்டம் செவ்வாய்க்கிழமை (10) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

மாநகர சபை ஊழியர்களால் முழுமையாக துப்புரவு செய்யப்பட்டு, கழிவுகள் யாவும் திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டன.

இவ்வேலைத்திட்டம் கல்முனை தமிழ்ப் பிரிவு இந்து மயானத்தில் சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் நற்பிட்டிமுனை போன்ற பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான எம்.அமீர், எம்.எம்.நிஸார் மற்றும் மேற்பார்வையாளர்கள் சிரமதானப் பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

# மேற்கத்தேயவர்களின் சம்பளப் பட்டியலிலுள்ள நபர்கள் மண்ணை கொச்சைப்படுத்துகின்றனர்

## ஹரீஸ் எம்.பி. குற்றச்சாட்டு

மாளிகைக்காடு செய்தியாளர்



முஸ்லிம் சமூகத்தின் உயர்ந்த திறமைசாலிகள் என்று அடையாளப்படுத்தப்படுபவர்கள் மேற்கத்தேயவர்களின் சம்பளப் பட்டியலில் இருந்துகொண்டு தாம் வாழும் எமது மண்ணைக் காட்டிக்கொடுத்துக்கொண்டும் ஊரின் மகிமைகளை கொச்சைப்படுத்திக்கொண்டும் இருக்கிறார்கள் - என்று திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனையில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஊடகங்களில் வந்து தாய்மண்ணையே காட்டிக் கொடுத்துக்கொண்டும் தென்கிழக்கு பிராந்தியத்தில் புகழ்பூத்த ஊரின் மகிமைகளையும் தேவைகளையும் பற்றி மோசமான வார்த்தைகளைக்கொண்டு கொச்சைப்படுத்தியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை இலுமினாட்டி வர்க்கமாகவே பார்க்கவேண்டியுள்ளது. அந்த இலுமினாட்டி வர்க்கத்தினர் மாதாமாதம் சம்பளப்பட்டியலில் இருந்துகொண்டு எமது கிழக்கு பிராந்திய எதிர்கால சந்ததிகளை நாசமாக்கும் பணியையே சரியாக செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் தாய்மண்ணையும் கிழக்கு பிராந்தியத்தையும் மேற்கத்தேய சக்திகளுக்கு காட்டிக்கொடுப்பதுடன் நாட்டுக்கு எதிராக செயற்படும் சக்திகளுடன், கரம் கோர்த்து இலுமினாட்டிகளாக மாறி பசுத்தோல் போர்த்திய புலிகளாக சமூகத்தில் உலா வந்துகொண்டிருக்கிறார்கள்.

எமது நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை நிமிடத்துக்கு நிமிடம் மாறலாம். அதனை அடிப்படையாகக்கொண்டு 2017இல் அமெரிக்கா 02 இலட்சம் ஏக்கர் காணிகளை எம்.சி.சி. ஒப்பந்தத்தின் ஊடாக கிழக்கிலிருந்து மன்னார் வரை கையகப்படுத்தவிருந்தது. ஏதோ சில எதிர்ப்புகளால் அது கைவிடப்பட்டது. இன்று மீண்டும் தெற்காசிய பாதுகாப்பு கேந்திரநிலையத்தை எப்படி உருவாக்கலாம் என்று சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் தனிநபர் ஆளுமை அரசியலை நோக்கி பழிவாங்கல் அரசியலிலிருந்து விலகி கணக்கு பார்த்து அரசியல் காய்நகர்த்துவதிலும் மூலோபாய அரசியல் காய்நகர்த்துவதிலும் அரசியல் சென்றுகொண்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில்தான் அடுத்த வருடம் நாம் ஜனாதிபதித் தேர்தலை சந்திக்கப் போகிறோம்.

நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துகொண்டிருக்கும் இந்நிலையில், அதை கட்டியெழுப்பும் தலைமையை உருவாக்குவது பற்றி நாம் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது எமது நாட்டுக்கு ஜனாதிபதியாக மக்களின் வாக்குகளால் ஒருவர் தெரிவாவதை விட தத்தமது நாடுகளுக்கு விருப்பமான ஒருவர் ஆட்சியில் அமர்வதையே மேற்கத்தேய நாடுகளும் அந்நிய நாடுகளும் ஆசிய நாடுகளும் விரும்புகின்றன. கருத்து வேறுபாடுகளுக்கப்பால் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வல்லமை கொண்டவர் என்பதில் மாற்றுக்கருத்துகளுக்கு இடமில்லை - என்றார்.

# கங்குவேலி குள ஆக்கிரமிப்பை தடுத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த கோரிக்கை



அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, கங்குவேலி குளத்தின் பகுதிகள் சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கங்குவேலி குளத்தினுள் சிலர் அத்துமீறி விவசாயம் மேற்கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் குளத்தின் பகுதிகள் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு குளத்தின் ஆக்கிரமிப்பை தடைசெய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கங்குவேலி கிராமத்தைச் சேர்ந்த 750க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக்குளத்தை நம்பி விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றன. இக்குளத்துக்குள் சிலர் அத்துமீறி விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுவருவதுடன், பாரிய இயந்திரங்களைக்கொண்டு குளத்தின் அணைக்கட்டுகளை சேதமாக்கி வருவதாகவும் கால்வாய்களை வெட்டி சேதப்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் பின்னர் ஆளுநரை சந்தித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இதனைத் தடுத்துநிறுத்துமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக சம்மேளன உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் கிழக்கு ஆளுநரின் பணிப்புரைக்கமைய திருகோணமலை பிராந்திய நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளரையும் சந்தித்து உரையாடியதாகவும் குறித்த சட்டவிரோத நடவடிக்கை தொடர்ந்து வருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்குளமானது 2019ஆம் ஆண்டு 24 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. மூதூர் பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸாரிடம் முறையிட்டபோதும் இது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படவில்லை. அத்துடன், இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு குளத்தின் ஆக்கிரமிப்பை நிரந்தரமாக தடைசெய்து இக்கிராம மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க அரச அதிகாரிகள் முன்வரவேண்டும் என கங்குவேலி திருக்கரைசயம்பதி விவசாய சம்மேளனத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வேலைவாய்ப்பு அமைச்சின் மீளாய்வு கலந்துரையாடல்



மட்டக்களப்பு

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் கிழக்கு மாகாணத்துக்கான முன்னேற்ற மீளாய்வு குறித்த கலந்துரையாடல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(10) இடம்பெற்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சால் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்றிட்டங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த் மற்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜேகதீசன் ஆகியோர் தெளிவுபடுத்தினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், இரண்டு வயதுடைய குழந்தைகளின் தாய்மார்கள் வெளிநாடுகளுக்கு தொழில் தேடி செல்வதனால், அவர்களுக்கான பராமரிப்பு பாதிக்கப்படுவதாகவும் பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு வயதெல்லையை தீர்மானிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது மாவட்ட, பிரதேச மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு'வரும் அமைச்சின் செயற்றிட்டங்களில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான இம்மீளாய்வுக் கலந்துரையாடலில் பங்கேற்ற இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தலைமையிலான அதிகாரிகள், திட்டங்களை அமுல்படுத்துவதில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்பன தொடர்பாக கலந்தாலோசித்தனர்.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் ஆர்.வி.விமலவீர, உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், அமைச்சின் பணிப்பாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை பொது நூலகம் மாநகர நிர்வாகக் காரியாலயமாக மாற்றப்பட்டது துரோகமாகும்

## ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பளீல் பௌண்டேசன் தலைவர் தெரிவிப்பு

கல்முனை பொது நூலகம் மாநகர சபையின் நிர்வாகக் காரியாலயமாக மாற்றப்பட்டு செயற்பட்டுவரும் விடயமானது கல்விச் சமூகத்துக்கு செய்த மாபெரும் துரோகமாகும். இதனை இறைவன் கூட மன்னிக்க மாட்டான் - என கல்முனை பிரதேச சபை ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினரும் பளீல் பௌண்டேசன் சமூகசேவை அமைப்பின் தலைவருமான அப்துல் கபூர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கல்முனைத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான மர்ஹூம் கலாநிதி மன்சூரின் எண்ணத்தில் உதித்ததே கல்முனையில் சகல வசதிகளையும் கொண்ட பொது நூலகமாகும்.

1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கல்முனைத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு தமிழ், முஸ்லிம் மக்களின் அதிக வாக்குகளால் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். கல்முனைத் தொகுதியின் தனது முதல் பணியாக 1978இல் கல்முனை நகரத்தின் அருகாமையில் கவனிப்பாரற்றுக் கிடந்த குளத்தில் அன்று முல்லை மாவட்டத்தின் மாவட்ட அமைச்சராக இருந்த மன்சூர் பொது நூலக மாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல்லை நாட்டி வேலைகளை ஆரம்பித்தபோது குளத்துக்கு உரிமை கொண்டாடி பொது நூலகம் அமைக்கப்படுவதை தடுத்து நிறுத்த அவரது அரசியல் எதிரிகளும் மாற்றுக் கட்சிக்காரர்களும் முறைப்பாடுகளை அனுப்பி தடைசெய்தனர்.

மாற்றுக் கட்சிக்காரர்களின் அத்தனை தடைகளையும் தாண்டி கல்முனை பிரதேசத்தின் தமிழ், முஸ்லிம் மாணவர்களின் உயர்கல்வி வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் அறிவுக்கோர் கலங்கரைவிளக்காக கல்முனை பொது நூலகத்தை அமைத்தார்.

பாடசாலைகளில் கற்கும் உயர்கல்வி மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தேவையான உசாத்துணை நூல்களை இந்தியாவிலிருந்து பெற்று சகல வளங்களையும் கொண்ட பொது நூலகத்தை உருவாக்கினார். இந்த பொது நூலகம் அன்றைய வெளிவிவகார அமைச்சராக இருந்த ஏ.சி.எஸ்.ஹமீட்டால் 1981.03.27ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

மர்ஹூம் மன்சூரின் நீண்டகால கனவிலிருந்து உருவாக்கப்பட்ட நீரேந்து குளத்தில் நிமிர்ந்து நிற்கும் பொது நூலகம் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு கனரக வாகனங்களின் இரைச்சல்களுக்கு மத்தியில் ஓர் அறைக்குள் முடக்கப்பட்டு மிகுதி பெரும் பகுதி கல்முனை மாநகர சபை காரியாலயமாக மாற்றப்பட்டு கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் இயங்கி வருகிறது.

இந்த முறைகேடான தீர்மானத்தை எடுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் கல்விச் சமூகம் மன்னிக்காது. இவ்வாறான செயற்பாடு இலங்கையிலுள்ள வேறெந்த பிரதேசத்திலும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஒரு நூலகம் அமைக்கப்பட்டு திறக்கப்படுவது 100 சிறைச்சாலைகள் பூட்டப்படுவதற்குச் சமனாகும்.

கல்முனை பிரதேச தமிழ், முஸ்லிம் இளைஞர்களினதும் கல்விச் சமூகத்தினதும் மற்றும் வாசகர்களினதும் நன்மை கருதி கல்முனை பொது நூலகத்தை அதற்கான கட்டிடத்தில் தனியாக இயங்கச்செய்து, மன்சூர் தனது அரசியல் வாழ்க்கையில் கண்ட கனவை நனவாக்க வேண்டும்.

# பாடசாலைகளில் சுகாதார மேம்பாட்டுச் செயலமர்வு





மாளிகைக்காடு,பொத்துவில் செய்தியாளர்கள்

நாவிதன்வெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப் பட்ட பாடசாலை சுகாதாரக் கழகங்களில் உள்ளவர்களுக்கு சுகாதார மேம்பாடு தொடர்பான செயலமர்வு செவ்வாய்க்கிழமை (10) சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின்கீழ் பிராந்திய பணிமனைக்குட்பட்ட சுகாதார நிறுவனங்களின் ஊடாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த செயற்றிட்டத்தின்கீழ் அமைந்த தேசிய ரீதியானதும் பிராந்திய ரீதியானதுமான முதலாவதான இச்செயலமர்வில் நாவிதன்வெளி பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை சுகாதாரக் கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுச் சுகாதார தாதியர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.பீ.முஹம்மட் சில்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தொற்று நோய் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால், பிராந்திய பொதுச் சுகாதார மற்றும் தரமுகாமைத்துவப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி, வாய்ச்சுகாதார வைத்திய நிபுணர் டொக்டர் எம்.எச்.கே.சரூக், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஐ.எல்.எம். லாபீர் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது கோட்ட மட்டத்திலான பாடசாலை சுகாதாரக் கழக மேம்பாட்டுக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. இக்குழு மாதாந்தம் ஒன்றுகூடி தொடர் செயற்பாடு பாடசாலைகளிலுள்ள சுகாதாரக் கழகங்களை ஒழுங்கமைத்து அதனை வலுவூட்டி மாணவர்கள் மத்தியில் சுகாதார பழக்கவழக்கங்களை ஏற்படுத்துவது தொடர்பாகவும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குடிசன வீட்டு வசதி தொகைமதிப்பு கணக்கெடுப்புப் பணிகள் ஆரம்பம்



பாறுக் ஷிஹான்

இலங்கையின் குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு-2024 கணக்கெடுப்புக்கு முன்னரான நிரற்படுத்தும் பணியின் தேசிய மட்ட பயிற்சி செயற்பாடுகள் கல்முனை பிரதேச செயலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக நேற்று புதன்கிழமை (11) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

குறித்த செயற்பாடுகளை உடனடியாக துரிதப்படுத்தும் நோக்குடன் கடந்த 03 தினங்களாக பல்வேறு துறைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2012ஆம் ஆண்டு இறுதியாக குடிசன கணக்கெடுப்பு நாடுபூராகவும் மேற்கொள்ளப்பட்ட நிலையில், 12 வருடங்களின் பின்னர் 2024ஆம் ஆண்டு இந்தக் கணக்கெடுப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இம்முறை வழமையாக படிவங்களைப் பயன்படுத்தி கணக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது எனவும் அதற்குப் பதிலாக டப் கணினிகளின் மூலம் கெப்பி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கணக்கெடுப்பு நாடுமுழுவதும் நடைபெறவுள்ளது என்றும் இதற்கு பொதுமக்கள் தங்களது பூரண பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி.அநுரகுமார தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இதற்கு முன்னோடியாக கல்முனை பிரதேச செயலக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.எல்.சுப்ஹானின் வழிநடத்தலின் கீழ் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் பயிற்சி செயலமர்வுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



***மொட்டுக் கட்சி வேட்பாளர்தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில வெல்லுவாராம் எண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த சொல்லியிருக்காரு எலுவா..? அப்ப ஆருடாம்பி அந்த வேட்பாளர் ஆள் எண்டதயும் ஒள்ளுப்பம் சொல்லன் பாப்பம்..! ஒருவேள இப்ப இருக்கிற ஜனாதிபதி ரணில மொட்டுக்கட்சில நிறுத்திற திட்டமோ..? இல்லாட்ட அன்பு மகன் நாமல் ராஷபக்சய நிறுத்த எண்ணமோ..? ஆர மொட்டுக் கட்சில இறக்கினாலும் தோல்வி நிச்சயம் எலுவா?***

# குசல் மெண்டிஸுக்கு உபாதை




இலங்கை அணியின் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் குசல் மெண்டிஸ் தசைப்பிடிப்பு உபாதைக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பாகிஸ்தான் அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் குசல் மெண்டிஸ் 79 பந்துகளில் 122 ஓட்டங்களை விளாசியிருந்தார். குசல் மெண்டிஸ் துடுப்பெடுத்தாடிய பின்னர் களத்தடுப்பில் ஈடுபடுவதற்கு களமிறங்கவில்லை. அவருக்கு தசைப்பிடிப்பு உபாதையொன்று ஏற்பட்டதால் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதன் காரணமாக போட்டியில் துஷான் ஹேமந்த களத்தடுப்பில் ஈடுபட்டார். உபாதை தொடர்பிலான மேலதிக தகவல்கள் வெளியாகவில்லை.

# இலங்கையுடன் சாதனை வெற்றியை பதிவுசெய்த பாகிஸ்தான்



நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியில் பாகிஸ்தான் 345 ஓட்டங்களை துரத்தியடித்து 48 ஆண்டுகால உலகக்கிண்ண வரலாற்றில் அதிக ஓட்டங்களை துரத்தியடித்த அணி என்ற சாதனை வெற்றியை பதிவுசெய்தது.

ஹைதராபாத் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றிருந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இலங்கை அணியின் இரண்டாம் விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த குசல் மெண்டிஸ் - பெதும் நிஸ்ஸங்க ஆகிய இருவரும் இரண்டாம் விக்கெட் இணைப்பாட்டமாக 102 ஓட்டங்களைப் பதிவுசெய்தனர்.

பெதும் நிஸ்ஸங்க தன்னுடைய 10ஆவது ஒருநாள் சதத்தோடு 61 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் 7 பௌண்டரிகள் அடங்கலாக 51 ஓட்டங்கள் எடுத்தார். குசல் மெண்டிஸ் 65 பந்துகளில் சதம் விளாசி 6 சிக்ஸர்கள் மற்றும் 14 பௌண்டரிகள் அடங்கலாக 122 ஓட்டங்கள் எடுத்தார். இந்த சதம் மூலம் குசல் மெண்டிஸ் இலங்கை அணிக்காக ஒருநாள் உலகக்கிண்ணப் போட்டிகளில் அதிவேக சதம் பெற்ற வீரராக மாறியதோடு, அது அவரின் மூன்றாவது ஒருநாள் சதமாகவும் மாறியது.



தொடர்ந்து சதீர சமரவிக்ரமவும் சதம் விளாசிய நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியானது 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 344 ஓட்டங்களை எடுத்தது. கன்னி ஒருநாள் சதத்தைப் பதிவுசெய்த சதீர சமரவிக்ரம 89 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 11 பௌண்டரிகள் அடங்கலாக 122 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்கை அடைவதற்கு பதிலுக்குத் துடுப்பாடிய பாகிஸ்தான் அணியானது ஆரம்பத்தில் தடுமாறியபோதிலும் மொஹமட் ரிஸ்வான் மற்றும் அப்துல்லா சபீக் ஆகியோரது சதங்களோடு போட்டியின் வெற்றி இலக்கை 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 345 ஓட்டங்களுடன் அடைந்தது.

பாகிஸ்தான் அணியின் வெற்றியை உறுதிசெய்த அதன் துடுப்பாட்டத்தில் மொஹமட் ரிஸ்வான் 121 பந்துகளுக்கு 3 சிக்ஸர்கள் மற்றும் 8 பௌண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 131 ஓட்டங்கள் எடுக்க, அப்துல்லா சபீக் 103 பந்துகளில் 113 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இலங்கை அணியானது அடுத்ததாக அவுஸ்திரேலியாவை எதிர்வரும் திங்கட்கிழமை (16) சந்திக்கவுள்ளது.

## இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் பதிவான சாதனைகள்

★ ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் அடித்த பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் என்ற சாதனையை முஹமட் றிஸ்வான் (131 ஆட்டமிழக்காமல்) படைத்தார்.

★ உலக கிண்ணத்தில் சேஸிங் செய்யப்பட்ட அதிகபட்ச ஸ்கோர் (345) இதுவாகும்.

★ இலங்கை, பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த தலா இரண்டு வீரர்கள் என 4 பேர் சதம் அடித்தனர். இதன்மூலம் ஒருநாள் போட்டியில் நான்கு சதங்களைக் கண்ட போட்டி என்ற சாதனையில் இணைந்துள்ளது. இலங்கையில் குசால் மெண்டிஸ் (122), சதீர சமரவிக்ரம (108) ஆகியோரும் பாகிஸ்தானில் அப்துல்லா ஷபிக் (113), முஹமட் றிஸ்வான் (131) ஆகியோரும் சதம் அடித்தனர்.

★ உலகக்கிண்ணத்தில் இலங்கை அணிக்கெதிராக தோல்வியை சந்திக்காமல் அதிக வெற்றி என்ற சாதனையை பாகிஸ்தான் படைத்துள்ளது. 8 முறை உலக கோப்பையில் இலங்கையில் வீழ்த்தியுள்ளது பாகிஸ்தான்.

★ இரு அணிகளிலும் 4ஆவது வீரர் சதம் அடிப்பது இது ஐந்தாவது முறையாகும். சமரவிக்ரம 108 ஓட்டங்களும் ரிஸ்வான் 131 ஓட்டங்களும் அடித்தனர்.

★ உலகக்கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் விக்கெட் கீப்பரின் 2ஆவது அதிகபட்ச ஸ்கோர் இதுவாகும்.

★ இரு அணியின் விக்கெட் கீப்பர்களும் சதம் அடித்தனர்.

# மலானின் அதிரடியில் இங்கிலாந்துக்கு அபார வெற்றி




தரம்சாலாவில் நேற்று நடைபெற்ற உலகக்கிண்ண ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 137 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்தியது.

முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 364 ஓட்டங்கள் குவித்தது. டேவிட் மலான் 140 ஓட்டங்களும் ஜோ ரூட் 82 ஓட்டங்களும் விளாசினர். அதனைத் தொடர்ந்து இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. 49 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் என தடுமாறியது.

எனினும், தொடக்க வீரர் லித்தன் தாஸ் அதிரடியில் மிரட்டினார். அவருக்கு பக்கபலமாக ரஹிம் ஆடினார். அணியின் ஸ்கோர் 121 ஆக உயர்ந்தபோது தாஸ் 76 ஓட்டங்களில் அவுட்டானார். பொறுப்புடன் நிதானமாக ஆடிய ரஹிம் 51 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். அடுத்து டௌஹித் ஹ்ரிடோய் 39 ஓட்டங்களில் அவுட்டாக ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் பங்களாதேஷ் அணி 48.2 ஓவரில் 227 ஓட்டங்களுக்கு ஓல்அவுட்டாகி படுதோல்வியடைந்தது. 107 பந்துகளில் 140 ஓட்டங்கள் விளாசிய மலான் ஆட்டநாயகன் விருதை வென்றார்.



# பதக்கங்களுடன் நாடு திரும்பிய வீர, வீராங்கனைகள்

சீனாவின் ஹாங்சூ நகரில் நடைபெற்ற 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்களை வென்ற இலங்கை வீர, வீராங்கனைகள் செவ்வாய்க்கிழமை (10) இரவு நாடு திரும்பினர். சிங்கப்பூர் சங்கி விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் எயார்லைன்ஸ் எஸ்.கியூ-468இல் இலங்கை வீரர்கள் இரவு 11.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று முடிந்த 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை ஒரு தங்கப் பதக்கம், 2 வெள்ளிப் பதக்கம் மற்றும் இரு வெண்கலப் பதக்கம் என மொத்தமாக 5 பதக்கங்களுடன் 26ஆவது இடத்தைப் பிடித்தது.

தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்ற ரத்நாயக்க மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 18 வயதுடைய தருஷி கருணாரத்ன என்ற மாணவியும் இதில் அடங்குகின்றார்.

# பழைய பதிவுகளால் இந்தியாவை விட்டு வெளியேறிய பாக். தொகுப்பாளினி

பாகிஸ்தானிய விளையாட்டு தொகுப்பாளினி ஜைனப் அப்பாஸ் தனது பழைய சமூக வலைத்தளப் பதிவுகளை கண்டனத்திற்கு உள்ளாக்கி இந்தியாவை விட்டு வெளியேறினார். அவர் இந்து மத நம்பிக்கைகளுக்கு எதிராக இழிவுபடுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்ததாக டில்லி வழக்கறிஞர் ஒருவர் புகார் அளித்துள்ளார்.

இதற்குக் காரணம் ஜைனப் அப்பாஸின் பழைய சமூக வலைத்தள பதிவுகள்தான். அதில் அவர் சர்ச்சைக் குரிய வகையில் இந்தியாவையும் இந்து மத நம்பிக்கைகளையும் அவமதிக்கும் கருத்துகளைக் கூறியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தியாவுக்கு எதிரானவர்கள் இங்கு வரவேற்கப்படுவதில்லை என்றும் ஐசிசி மற்றும் பிசிசிஐ அவரை உலகக்கிண்ணத் தொடரிலிருந்து நீக்க வேண்டும் என்றும் வழக்கறிஞர் தனது புகாரில் கூறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஜைனப் அப்பாஸ் இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், அவர் பாதுகாப்புக் காரணங்களுக்காக நாட்டை விட்டு வெளியேறியதாக சிலர் தெரிவித்துள்ளனர்.



# பாடசாலைகள் கால்பந்தாட்டப் போட்டியில் வரலாற்றுச் சாதனை படைத்தது சென். பற்றிக்ஸ் கல்லூரி

பு.கஜிந்தன்

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டப் போட்டியில் 20 வயதுப் பிரிவில் வரலாற்றுச் சாதனை படைத்தது சென். பற்றிக்ஸ் கல்லூரி.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரிக்கும் இடையிலான இறுதியாட்டம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மாலை நடைபெற்றது. இறுதியாட்டத்தில் தேசிய ரீதியில் பலம் வாய்ந்த கொழும்பு ஸாஹிராக் கல்லூரியை சமநிலை தவிர்ப்பு உதை மூலம் 04 : 03 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று அகில இலங்கை 20 வயதுப் பிரிவில் சம்பியனானது.

2022, 2023ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் 20 வயதுப் பிரிவில் கால்பந்தாட்டத்தில் சம்பியனான ஒரே பாடசாலை சென். பற்றிக்ஸ் கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வயதுப் பிரிவினர் 2018ஆம் ஆண்டில் 16 வயதுப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகள் கால்பந்தாட்டத்தில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த அணி என்பது குறிப்பிடத்தக்கது.

# சில சமயங்களில் தசைப்பிடிப்பு ஏற்பட்டதுபோன்று நடித்தேன் - றிஸ்வான்




(ஏ. அகீல் சிஹாப்)

இலங்கை அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தின்போது பாக். வீரர் முஹமட் ரிஸ்வானுக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டது. ஆனால், அதற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டு றிஸ்வான் தொடர்ந்து ஆடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

வெற்றியின் பின் றிஸ்வான் தெரிவிக்கையில், எப்பொழுதுமே நமது அணிக்காக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும்போது நாம் பெருமைகொள்ள வேண்டும். அந்தவகையில் இந்த ஆட்டத்தில் நான் எனது அணியின் வெற்றிக்குப் பங்காற்றியதை நினைத்துப் பெருமை கொள்கிறேன். இப்போது பேசுவதற்கு என்னிடம் வார்த்தை இல்லை. அந்தளவுக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

தொடக்கத்திலேயே அடுத்தடுத்து இரண்டு விக்கெட் இழந்ததும் நல்ல பார்ட்னர்ஷிப்பை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த மைதானம் பேட்டிங்குக்கு சாதகமாக இருந்ததால் அப்துல்லாவிடம் நாம் ஒவ்வொரு படியாக சேசிங்கை அடுத்தகட்டத்துக்கு கொண்டுசெல்வோம் என்று கூறி அவருடன் சிறப்பான பார்ட்னர்ஷிப்பை அமைத்தேன். ஆட்டத்தின் இடையில் எனக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டது உண்மைதான்.
அதேநேரம் சில சமயங்களில் நான் நடித்தேன் என தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு

தோப்பூர் செய்தியாளர்

2023ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி கந்தளாய் லீலாரத்ன விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் 18 வயதுக்குட்பட்ட தட்டெறிதல் போட்டியில் றஸ்மி அஹ்சன் 37.88 மீற்றர் தூரம் எறிந்து முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளதாக கல்லூரி முதல்வர் எஸ்.எம்.றஹீம் தெரிவித்தார்.

கடந்த வருடம் தேசிய மட்டத்தில் மூன்றாமிடம் பெற்று பாடசாலைக்கும் தோப்பூர் மண்ணுக்கும் பெருமை சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கல்லூரி முதல்வர் எஸ்.எம்.றஹீம் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.




# இன்றைய போட்டி




| அவுஸ்திரேலியா | | தென்னாபிரிக்கா |
|---|---|---|
| 50 | நேருக்குநேர் | 44 |
| 03 | உலகக்கிண்ண நேருக்கு நேர் | 02 |

லக்னோ - பிற்பகல் 2.00 மணி

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7